ഉണ്ണുനീലി സന്ദേശം

ഭാഗം 2 ശ്ലോകം 1-4

[illegible]
M31.211-4
186801

25

லெ—ரத்ன, தங்க வெள்ளி நகை வியாபாரிகள்
216, சைனாபஜார் ரோட், சென்னை.
. 916

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை.

ஸம்புடம் 21] பிரமோதூதவுஸ அற்பசி—தைமீ [ஸஞ்சிகை 1



ஸம்பாதகர்—ஸ்ரீ வாஸுதேவாசார்யர்
வருஷ சந்தா ரூ. 3] **Oct. to Jan. 1931** [ஸஞ்சிகை 1-க்கு அணு 6.

## விஷய ஸூசிகை.


1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்—
   ஸ்ரீ. உ.ப. வித்வான். ஏ. வி. கோபாலாசாரியர், எம்.ஏ., பி.எல். .... .... .... 1
2. ஸ்ரீ வால்மீகி மஹர்ஷியும் ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகனும்—
   ஸ்ரீ உ.ப. வித்வான் தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர். .... 7
3. மதங்களின் சாயைகள்—
   ஸ்ரீ. உ.ப. வெ. ராம. நரஸிம்ஹாசார்யர் .... .... 14
4. அத்யவஸா[யத்]தின் பெருமை—
   ?[..]ன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்ய ஸ்வாமி .... .... .... 23
5. ஸ்ரீ [பா]ஷ்யகாரரின் பெருமை—
   ஸ்ரீ உ.ப. டி. ராமஸ்வாமி அய்யங்கார், பி.ஏ., பி.எல். .... 28
6. ஸ்ரீ. வேதார்த்த ஸங்க்ரகம்—
   ஸ்ரீ உ.ப. வாஸுதேவாசார்யார் .... .... 289


---


## ஸம்ஸ்க்ருத தமிழ் அகராதி.

இதில் பகவத்கீதை, ஈசகேனதைத்ரீயாதி உபநிஷத்துக்கள், பிரம்மஸூத்ரங்கள் ஸந்தியாவந்தன, புருஷஸூக்த ருத்ரஸாமகாதி வேத மந்திரங்கள், தர்க்க ஸங்க்ரஹம், கௌமதி வியாகரண ஸூத்ரம், ஸித்தாந்த கௌமதி இவைகளிலிருந்து பதங்களின் அர்த்தங்களுக்கெதிரே உத்தியோகஸ்தர், வியாபாரஸ்தர், வைதீகர், பயிர்த் தொழிலாளர், முதலிய யாவரும் எளிதில் ஸம்ஸ்க்ருதத்தைக் கற்கும் வண்ணம் உதாஹரணங்களையும் இதர ஸௌகர்யங்களையுங்காட்டி க்ரந்த எழுத்தில் ராயல் 8 சைசில் கிளேஸ் கடிதத்தில் இடங்களைச் சற்றும் வீணாக்காது அச்சிடப்பட்டு வருகின்றன. வேதாந்த, நியாய, மீமாம்ஸா நாட்ய ஜ்யோதிஷ பரிபாஷைகளும் சிற்சில இடங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. முதல் பாகம் சுமார் 200 பக்கம் தபால் சார்ஜ் உள்பட ரூபாய் 2. முழுபுஸ்தகமும் 6-ரூபாய்க்கு மேலாகு மாதலால் ஒரு மாதத்திற்குள் 5-ரூபாய் அனுப்பிவிட்டால் முதல் பாகத்தை உடனே அனுப்பி இரண்டாவது பாகம் இனாமாக 'மோக்ஷ வழி' என்னும் 8 அணா விலையுள்ள அருமையான புஸ்தகத்தோடு இனிவேறு சார்ஜ் ஒன்றும் செய்யாமல் ரிஜிஸ்டர்ட் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

## மோக்ஷவழி

இது பகவத்கீதை, உபநிஷத்துக்கள், பிரம்மஸூத்ரங்கள், தர்மசாஸ்திரம், தமிழ் வேதம் இவைகளை ப்ரமாணமாகக் கொண்டு அத்வைத த்வைத விசிஷ்டாத்வைத மும்மதங்களையு மனுசரித்து இக்கலியுகத்தில் சுலபத்தில் பாவங்களைத் துலைத்துக்கொண்டு நற்கதியடைய பெரியோர்கள் அனுஷ்டித்த சுலபமான வழிகளையும், உலகத்தில் நாம் பார்ப்பவைகளையும் அவைகளால் தெரிந்து கொள்ளுபவைகளையும் நாம் இருக்கவேண்டிய முறைகளையும் எளிய தமிழ் நடையில் கூறுகின்றது. விலை அணா 8. தபால் சார்ஜ் ஒன்றுக்கும் இரண்டிற்கும் அணா நான்கே.

ஷை நூல் க்ரந்த ப்ரமாண தாத்பர்யங்களோடு ப்ராம்மணர்களுக்காக க்ரந்த தமிழ் நடையில் எழுதப்பட்டது தபால் சார்ஜ் உள்பட ரூபாய் ஒன்றே.

விலாசம்:—நே. ஈ. துரைஸாமி ஐயங்கார்
பிரம்மஸாயுஜ்ய லைப்ரெரி மானேஜர்,
நேமம் கிராமம் திருமஷி போஸ்ட்
வழி பூந்தமல்லி, செங்கல்பட்டு ஜில்லா.

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ॥

# வேதாந்த தீபிகை

ஸம்பாதகர்:—ஸ்ரீ வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 21] பிரமோதூத ஹு அற்பசி-தைமீ [ஸஞ்சிகை 1.

[illegible]

[illegible]

[ஸ்ரீ பாகவதம் 1-2-39]

ஸ்ரீ:

## ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[ஸ்ரீ. உப. வித்வாந். ஏ. வி. கோபாலாசாரியர், எம். ஏ., பி. எல்.]

(முன் ஸஞ்சிகை தொடர்ச்சி.)

ஸாங்க்யர்கள் வேதாந்தியின் வாதரூபமான ச்லோகத்தைக் கேட்டதும் ஈச்வரனை ஒப்புக்கொள்ள எங்களுக்கு ஆக்ஷேபமில்லையென்றும், நாங்கள் இருபத்தைந்து தத்துவங்கள் மட்டுமே யுளதென்று கணக்கிடாமல், உங்கள் இஷ்டப்படி இருபத்தாறு அல்லது இருபத்தேழு வேண்டுமென்றாலும் கூட எண்ணத்தயாராக விருக்கிறோ மென்பதாக ஸேனாபதி சொல்லுகிறார். மஹாபாரதம் மோக்ஷ தர்மத்தில் 'அவனை 25வதென்றும், 26வதென்றும், அல்லது 27வது என்றும் சொல்லுவார்கள்' என்று கூறியிருப்பதை யனுஸரித்து அதே பதங்களை யமைத்து இங்கே ஸேனைத் தலைவரின் ச்லோகம். 25க்கு மேல் விரல் விடமாட்டோமென்று கணக்கில் பிடிவாதம் செய்தவர்கள், 26 வேண்டுமானாலும், அல்லது 27 வேண்டுமானாலும் எண்ண சம்மதமென்று இணங்குவதாக வேடிக்கை. மஹாராஜர் இதைக்கேட்டதும் நிரீச்வரவாதம் செய்தஸாங்க்யர்கள் ஸேச்வரராகிவிட்டால், அவர்களைச் சேர்த்துக் கொள்ளலாமென்கிறார். அதற்கு குரு, 'குடிகெட்டுப்போகும். ஸேச்வர ஸாங்க்யமென்று

சொல்லப்படும் யோக தந்திரத்தில் ஈச்வரனுடைய ஐச்வர்யம் பரிச்சின்னமானதென்றும், அவனுடைய ஞான, சக்தி, பல, ஐச்வர்யங்கள் கண்ணாடியில் ப்ரதிபலிப்பது போன்ற வாஸ்தவ மல்லாத தோற்றமே யென்றும் கூறுகிறார்கள். ஆகையால் அவர்களுடனும் வாதம் செய்து அவர்களைத் திருத்த வேண்டுமென்று வேதாந்த வாதியான சிஷ்யரைக் கட்டளையிடும்' என்கிறார். யோக மதத்தை ஒரு ச்லோகத்தால் சிஷ்யர் மறுக்கிறார். யோகம் என்பது உபநிஷத்துக்களிலும், கீதையிலும், மஹாபாரதம், பாகவதம் முதலிய ஸித்தாந்த நூல்களிலும் பிரஸித்தமானது. அந்த யோகம் நமக்கு இஷ்டம். ஸாங்கிய தந்த்ரத்தைச் சார்ந்த யோகமென்னும் தந்த்ரத்தை மட்டும் நாம் நிராகரிப்போம். யோக தந்த்ரத்தைப் பிரவர்த்தனம் செய்தவர் ஹிரண்யகர்பர். ஸர்வலோக பிதாமஹரான அவருக்கு நாம் நேரில் பதில் சொல்லுவது உசிதமல்ல. பகவானுடைய ஐச்வர்யம் ப்ரதிபலனம் போன்ற வாஸ்தவமல்லாததென்று ப்ரஜல்பனம் செய்பவரான யோகமென்று பெயரிட்ட அபதந்த்ரமான யோகப் படிப்புடையவர்களுக்கு, ஸ்வபாவஸித்தமான ஞானம், ப்ரசகனம் (சக்தி), பலம் முதலிய ஈச்வரகுணகணங்களை மகிழ்ந்துபாடும் பொய்யா மறையுரையே பதிலாகட்டும். நாம் எனத்தனை பெரியவருக்குப் பதில் கூறவேண்டும்? அவர் நான்கு முகங்களாலும் அத்யயனம் செய்யும் உபநிஷத்துக்களே அவருக்குப் பதில் கூறட்டும். 'இவனுடைய விவிதமான சக்தி ஸர்வோத்க்ருஷ்டமானதென்று பலகாலும் கேள்வியுற்றோம். இவனுடைய ஞானமும், பலமும், கிரியைகளும், சக்தியும் ஸ்வாபாவிகமென்றும் கேள்வியுற்றோம்' என்பது மறையின் பொய்யாமொழி. அதை 'ஹிரண்யகர்பர் மறந்தார்போலும்'. 'யோகமென்று பெயர்வைத்த' என்பதால், வேதாந்தங்களிலும் ப்ரஸித்தமான யோகத்தின் பெயரை மட்டும் இவர்கள் வழங்குகிறார்களே யொழிய, இவர்கள் தந்த்ரம் அபதந்த்ரமாகும். 'ப்ரஜல்பனம் செய்கிறார்கள்' என்பதால், ஈச்வரனிடம் ஸரஸமான பக்தியில்லாமல், நீரஸமும் சுஷ்கமும், நெற்பசையே யில்லாத கேவலப் பதருமான யோகத்தை, கண்ணில் ஒரு பொட்டு ஜலம் வராமல் கல் நெஞ்சராய்ச் செய்கிறார்களென்று ஸூசனம். 'ஜாமதக்ந்யர் ஜல்பனம் செய்யக் கேட்டோம்' என்பது போல.

'பகவான் என்னும் பதத்தால், ஐச்வர்யம், வீர்யம் முதலிய குணங்கள் நிறைந்தவரென்கிற நிர்வசனத்தின் ஸூசனம். 'பகவானுடைய ஐச்வர்யத்தை' என்பதால் ப்ரஸித்த நிர்வசன ஸ்ம்ருதியை மறந்தாரென்று ஸூசனம். அடுத்த பாதத்தில் 'பராஸ்ய சக்திः' என்கிற ச்ருதியையும் மறந்தாரென்று ஸூசனம். 'ம்ருணந்துः' என்பதால் 'மாயந்தி ம்ருணந்தி ஸாயவः' என்கிற சுகர் ச்லோகத்தின் ஸ்மரணம். ப்ரஜல்பனத்திற் கெதிர்த்தட்டாக 'ப்ரதிபலனம்' என்றுரைத்தற்கு 'ப்ரதி பணிதி' என்று ப்ரதியுரை. ஆனால் இது அதைப்போல் பொய்யுரையல்ல வென்கிறார். அதன் பிறகு 'இவர்களை யெதிர்த்ததுபோதும், இவர்கள் ஸாதுக்கள், பொல்லாதவரல்ல, கணாதருடைய வைசேஷிக மதத்தை எதிர்க்கக் கட்டளையிடவேண்டுமென்று [stamp]கிறார். அந்த மதத்தைப் பற்றி ஒரு ச்லோகம் கூறப்படுகிறது. அஸத் [stamp]வாதத்தை

[library stamp]



அவர்கள் கைக்கொள்ளுகிறார்கள். ஸத்வித்யையில் உபநிஷத்தாலேயே அந்த வாதம் கண்டிதமாயிற்று. 'அஸத்திலிருந்து எப்படி ஸத்துண்டாகும்' என்று அங்கே பூர்வபக்ஷ நிரஸம். ஸத்வித்யையைக் கொண்டே ஸாங்க்ய மதத்தை ஸூத்ரகாரர் ஈக்ஷத்யதிகரணத்திற் கண்டித்தார். அதைக்கொண்டே வைசேஷிகர்களின் பரமாணுவாதமும் கண்டிதமாகிறது. அபாவத்திலிருந்து பாவவஸ்துக்கள் உற்பத்தியாகின்றன என்கிற பௌத்த மதமும் அதனால் நிராகரிக்கப்படும். இந்த க்ரமத்தையும் இங்கே நினைக்கவேண்டும். அஸத் கார்ய வாதம் பௌத்த மதத்திற்கிடங் கொடுக்கும். ஸாங்க்யர்கள் வேதாந்திகளைப்போல ஒருவாறு ஸத்கார்ய வாதத்தை ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆத்மா ஜடமல்லவென்றும் சித் ஸ்வரூபமென்றும் அவர்களது கொள்கை. ச்ருதி ப்ரக்ரியைகளை அவர்கள் ஒழுங்காக அர்த்தம் செய்வதில்லை, ஏகவிஜ்ஞானத்தால் ஸர்வவிஜ்ஞானம் வருகிறதென்றும், ஸத்தென்னும் ஸூக்ஷ்மமான சிதசித்விசிஷ்ட ப்ரம்மமே எல்லாமாகிறதென்றும், ஸகல ஜகத்தும் ப்ரம்மாத்மகமென்றும், ஸ்பஷ்டமாக ஸத்வித்யையில் சொல்லுவதை அவர்கள் நேராகக் கொள்வதில்லை. ஒருக்கால் ப்ரக்ருத்யதிகரணத்தின் ச்ருதப்ரகாசிகையில் கூறியிருக்கிறபடி முடிவில் உபாதானகாரணத்வ விஷயத்தில் வைசேஷிகர்க்கும் நமது மதத்திற்கும் மிகுந்த பேதமில்லையானாலும், புருஷார்த்த விஷயத்தில் அவர்கள் கொள்கை நகைப்புக்கிடமாகிறதென்கிறார். மோக்ஷமென்பது ஆனந்த மயனான பரமபுருஷனோடு ஆனந்தத்தில் ஸாம்யமென்று உபநிஷத்து கூறுகிறது. அவனோடு ஸாம்யத்தை ச்ருதிகள்ஸ்பஷ்டமாகக் கூறியும், இவர்கள் பாஷாணத்தோடு (கல்லோடு) ஏற்படும் ஸாம்யமே மோக்ஷமென்பர். ஸாம்யம் என்ற ச்ருதி பதத்திற்கு ஐக்யம் என்று அர்த்தம்கொள்ளக் கூடாதென்று கீதையில் பகவான் 'என்னுடன் ஸாதர்ம்யத்தையடைந்தவர்' என்று ஸாதர்ம்யமே ஸாம்ய சப்தார்த்தமென்று வியாக்யானம் செய்ததைக்காட்ட 'ஸாதர்ம்யம்' என்கிற சப்தத்தையும் இங்கே ப்ரயோகிக்கிறார். சைதன்ய சூன்யமாய் ஞானலேசமில்லாமலிருப்பதே மோக்ஷமானால், ஆறுமாஸம் கூட்டைவிட்டு நினைவில்லாமல் தூங்கும் கும்பகர்ணனே பாக்யவானாவான். சாபமே அவனுக்கநுக்ரஹமாகும். இந்த வார்த்தையால், அஹல்யைக்குக் கல்லாகும்படி நேர்ந்த சாபமும் அநுக்ரஹமாகும்' என்றும் வேடிக்கையாக இங்கு ஸூசனம். கணாதர் பதத்தை 'ஔலூக்ய தர்சனம்' என்பர். உலூகம் என்பது கோட்டான். அதற்குப் பகல் வெளிச்சம் இருட்டாகத் தோன்றும். இருட்டுத்தான் அதற்குக் கண் தெரியக் கூடிய வெளிச்சமாகும். ஞான வெளிச்ச மில்லாமையே இவர்களுக்கு மோக்ஷம்; ஞான வெளிச்சமே இவர்களுக்கு ஸம்ஸார மென்றஇருட்டாகு மென்று வேடிக்கையாய்க் காட்டுவதற்காக உலூகருடைய உபதேசாபதேசமாகவந்ததென்கிறார். பௌத்தர்களை வைநாசிகரென்பர். ஒவ்வொருவஸ்துவும் ப்ரதிக்ஷணம் நாசமடைகிறதென்பது அவர்கள் கொள்கை. வைசேஷிகர்களும்வஸ்துக்கள் சில க்ஷணங்களில் உபசயாபசயங்களால் நசித்துக்கொண்டு புதிது புதிதாய் அவயவிகளென்கிற புது வஸ்துக்களாக உண்டாகின்றனவென்பர். அவர்களைப் பாதி வைநாசிகர் (அர்த்த வைநாசிகர்) என்பர்.

இந்த வொற்றுமையை முன்னிட்டு வைசேஷிகரை நிராகரித்ததும், அடுத்தார்ப்போல் பௌத்தர்களை ஸூத்திரத்தில் நிராகரிப்பதாக சங்கர பாஷ்யத்தில் காட்டப்பட்ட விஷயத்தை இங்கே ஸூசிக்கிறார். 'தர்க்க மென்னும் இந்திர ஜாலத்தில் வல்லவரான பௌத்தர்களை நிராஸம் செய்ய நீர் பர்யாப்தரோ (போதுமானவரோ) என்று மஹாராஜர் வினவ, சிஷ்யர் 'தங்கள் கட்டளையின் கீழ் நடக்கும் என்னொருவனுடைய ப்ரதிக்ஷேப சக்திக்கு இவர்கள் எல்லோரும் அபர்யாப்தர் (போதாதவர்)' என்று கூறுகிறார். பாரத யுத்தாரம்பத்திற்கு முன், கீதையின் முதலாவது அத்தியாயத்தில் துர்யோதனன் 'அபர்யாப்தம்' 'பர்யாப்தம்' என்கிற பதங்களையுபயோகித்துச் சொல்லும் பலாபலதாரதம்ய ச்லோகத்தில், அவன் அர்ஜுனனையும், பீமனையுங் கண்டு நடுக்கத்துடன் அவ்விதம்பேசியதாக, பதங்களின் கிரமத்தை மாற்றி யந்வயம் செய்து தாத்பர்ய சந்த்ரிகையில் வ்யாக்யானம் செய்திருந்தாலும், இங்கே சிஷ்யர் வாதப் போரில் பயலேச மில்லாதவராதலால், அதே பதங்களை இங்கே இப்படி ப்ரயோகித்தார்; நாடகத்துக்குத் தக்கபடி மிகவும் சுருக்கமாயும் ரஸமாயும் விநோதமாயும் இங்கே யுக்திகள் கூறப்படுவதைக் கவனிக்கவேணும். பௌத்த மதத்தில் நான்கு பேதம்—வைபாஷிகர், ஸௌத்ராந்திகர், யோகாசாரர், மாத்யமிகர் என்று நான்கு வகை. இவர்களில் ஒருவரை யொருவர் மறுதளித்துக்கொள்ளுகிறார். ஒவ்வொருவர் சொல்லுவதும், 'என் தாயார் மலடி' யென்பதைப் போல ப்ரத்யக்ஷமாய் ஸர்வானுபவத்திற்கும் அந்த சொல்லுக்குமே விரோதமானது. வைபாஷிகர்கள் எல்லாம் க்ஷணிகமென்றும், ஒவ்வொரு க்ஷணத்திலும் வஸ்துக்கள் நாசமடைந்து அந்த ஸ்தானத்தில் புதிது புதிதாய் வஸ்துக்களுத்பத்தியாவதாகவும் சொல்லுகிறார்கள். இவர்கள் வெளி ப்ரபஞ்சம் ப்ரத்யக்ஷப்ரமாணத்தாலறியக் கூடியதென்கிறார்கள். ஸௌத்ராந்திகர்கள் வெளி ப்ரபஞ்சம் ப்ரத்யக்ஷத்தால் புலப்படுவதல்லவென்றும், ஞானத்தினால் அனுமிக்கப்படுகிறதென்றும் சொல்லுகிறார்கள். இவர்களிருவரும் வெளிப்ரபஞ்சம் ப்ரதிக்ஷணவிநாசியாய் உள்ளது என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். யோகாசாரர் பாஹ்ய ப்ரபஞ்சம் அடியோடில்லை யென்றும், ஞான மென்னும் ஆந்தரப் பொருள் மட்டும் க்ஷணிகமாயுள்ளதென்றும், வெளி ப்ரபஞ்சம் மாயையென்கிற ஸம்வ்ருதியினால் ஸத்யம் போல தோன்றுகிறதென்றும் சொல்லுகிறார்கள். ஞானமும் பொய்; சூன்யமேயுளதென்று மாத்யமிகர் கொள்கை. இப்படி ஒருவருக்கொருவர் நேர் விரோதமாயும், யார் சொல்லுவதும் அவரவர் சொல்லுக்கும், செய்கைக்கும் விரோதமாயுமிருப்பதால், வாதம் செய்ய வெட்கப்படுகிறார்கள்; கர்வத்தை விடுகிறார்களென்கிறார். மற்றொரு ச்லோகத்தால் ஒரே யுக்தியால் க்ஷணபங்கத்தை யாதரிக்கும் மூன்று வித பௌத்தர்களும், சூன்யவாதியும் நிரஸ்தராவரென்கிறார். இவர்கள் 'புத்தர்' என்று பெயர் கொண்டவர்கள். இவர்கள் வாதம் செய்யும் பொழுது, இவர்கள் சொல்லும் பொருள்களை யுணர்ந்து, புத்தராய்ப் பேசுகிறார்களா, அல்லது புத்தரல்லாமல் அறிவிலிகளாய்த் தாங்கள் சொல்லுவதன் பொருள்களையே யறியாமற் பேசுகிறார்களா? அர்த்தத்தை யுணர்ந்துதான் சப்தத்தை அமைப்பரென்பது ப்ரஸித்தமான நியாயம். இந்த நியாயத்தை



ஸூசனம் செய்ய 'வைநாஸிகா' என்கிற பதத்தை ப்ரயோகிக்கிறார். அறிகிறவனும் ப்ரதிக்ஷண மழிவான், அறியப்படும் பொருளும்ப்ரதிக்ஷணமுமழியுமென்பது க்ஷணபங்கவாதம். பொருளையறிவதற்கும், பிறகு அந்த அறிவைக்கொண்டு சப்த வ்யவஹாரம் செய்யவும் ஒரு க்ஷணத்தில் அவகாசமேகிடையாது. பொருளையறிந்தவன் வேறு, அதைப்பற்றி பேசுபவன் வேறு என்றே ஏற்படும். ஆகையால் அறிந்தவர் (புத்தர்) பேசுகிறதில்லை; பேசுகிறவர் (புத்தரல்ல) அறிந்தவரல்லவென்று வேடிக்கையாய்க் காட்டுகிறார். தாங்கள் தத்துவங்களையறிந்து பிறர்க்கு சிக்ஷை அல்லது உபதேசம் செய்ய அவகாசமே கிடையாது. ஆகவே சிக்ஷையே இவர்கள் மதத்தில் ஸம்பவிக்கமாட்டாது. புத்தர் என்று பெயர் கொண்டவராய்ச் சொல்லும் பொருளையுணராமல் அபுத்தராய்ப் பேசுகிறோமென்று விடைகூறினால், அவர்கள் அறிவிலிகளாய், ஜடராய் இருப்பதாக அவர்களே ஒப்புக்கொண்டதாக ஏற்படுவதால், நாம் ஜயித்தோம்; நாங்கள் பேசும் பொருள்களை யுணர்ந்தறிந்தே பேசுகிறோமென்றால், அனேக க்ஷணங்களில் பேசுகிறவரும் பேசும் பொருளுமிருப்பதாக ஏற்படுவதால், க்ஷணபங்கவாதத்திற்கு பங்கமும், நமக்கு ஜயமுமேற்பட்டது. இருவகையிலும் ஜயம் நம்முடையதே என்று ஜயபேரியடிக்கலாம். திங்நாகரென்று பௌத்த மதத்தில் பெரிய தார்க்கிகர்-அவரை திக்கஜம் போன்றவரென்பர். யானைகள் தந்தத்தோடு தந்தம் முட்டிப்போர் புரிவதுபோல், அவர் நீண்ட கர்க்கசமான தர்க்கச் சொற்களான தந்த்யாக்ஷரங்கள் நிறைந்த சொற்களை பற்களைக்கடித்துக் கொண்டு கடினமாய் வ்யவஹரிப்ப ரென்று வேடிக்கையாய்க் காட்டுகிறார். 'தந்தாதந்தி' என்பது திரும்பத் திரும்ப மாறி மாறி தந்தங்களால் யானைகள் ஒன்றுக்கொன்று செய்யும் யுத்தத்தைச் சொல்லும். அந்த சொல்லினால், ஒருவரை யொருவர் எதிர்ப்பவர் அனேக க்ஷணங்களிருந்து தீரவேண்டுமென்பதை வேடிக்கையாகக் காட்டுகிறார். இச் சுருக்கமான சொல்லைக்கேட்டு ஸௌகதர்கள் திக்கு திக்காய் வெளியே ஓடுகிறார்கள்; ஆனால் ஸர்வ சூன்யவாதியான மாத்யமிகன் மட்டும் ஒன்றுக்கும் அஞ்சாமல், தர்க்க பாண்டித்ய கர்வத்தைக் கொண்டு முன் நிற்கிறானென்று ஸேநாபதி கூறுகிறார். பௌத்தர்கள் வெளியே திக்கு திக்காயோடுகிறார்களென்பதால் பௌத்தமதம் நமது தேசத்திற் பிறந்து வளர்ந்தோங்கியும், பிறகு இங்கே நிலைநிற்கமாட்டாமல், சீனா, திபேத்து, ஜப்பான், பர்மா, ஸையாம் முதலிய வெளிதேசங்களுக்கு திக்கு திக்காய் ஓடிப்போய்விட்டதென்று வேடிக்கை யாகக்காட்டப் படுகிறது. சிஷ்யர்கள் குரு சொன்னதை அங்கீகரித்து ஆசரணை, செய்யவேணும்; ஆக்ஷேபித்து கேள்விகளும் கேட்கவேணும். கேள்விகேட்பதை யோகமென்றும், அங்கீகரிப்பதை யாசாரமென்றும் சொல்லுவர். ஆந்தரமான ஞானமும் பொய், பாஹ்ய பதார்த்தமும் பொய்யென்று குருவுபதேசித்ததும், யோகாசாரரென்னும் சிஷ்யர்கள் பாஹ்ய ப்ரபஞ்சம் பொய்யென்பதை ஒப்புக்கொண்டு ஆசரிக்க இசைந்து, ஆந்தரமான ஞானமும் எப்படிப் பொய்யாகுமென்று பர்யனுயோகம் செய்தார்கள். யோகம், ஆசார மிரண்டும் செய்ததால் அவர்களுக்கு யோகாசாரர் என்று குரு பெயரிட்டார். மாத்யமிகர்கள் இரண்டையும் அங்கீகரித்துவிட்டு எல்லாம் சூன்ய

மென்று இசைந்தார்கள். ஆசாரம் செய்ததால் அவர்கள் உத்தமர்கள். யோகம் என்னும் கேள்விகளைக்கேட்டு ஆக்ஷேபிக்காததால் அதமர்கள். இப்படி அவர்களுக்கு ஒருவாறு உத்தமத்வமும், மற்றொருவகையில் அதமத்வமும் வந்ததால், அவர்களுக்கு மத்யமர் (மாத்யமிகர்) என்று பெயரிட்டார். மாத்யமிகர்கள் செய்யும் கோஷத்தை வர்ணிக்கும் ச்லோகம் மிகவழகு. 'வைபாஷிகர்களுடைய பாஷை க்ஷேமத்தை யடையட்டும். ஸௌத்ராந்திகர்கள் க்ஷேமமாயிருக்கட்டும். யோகாசாரர்கள் தங்கள் அனுமான ப்ரயோகங்களை வெளிவிடட்டும். இவர்களுக்குப் பயப்பட்ட அத்வைதமதம் முதலியதாலென்ன பயன்? ஒரு தத்வத்தைத் தானேன் ஒப்புக் கொள்ளவேண்டும்? அதிஷ்டானமேயில்லாமல் ஏன் ப்ரமம் கூடாது. ஒன்று மில்லாமையென்னும்சூன்யமே தத்துவமாகும். நாம் தத்வசூன்யமான அத்வைதத்தைக் கைக்கொள்வோம். எங்கள் வாதத்தில் யாதொரு கோணலுங்கிடையாது; நாங்கள் மிக்க நேராய் வாதம்செய்பவர்கள். எங்களை ஜயிப்பாரொருவருமிலர். இதோ கிளம்பி வந்துவிட்டோம்'. அத்வைதத்திற்கு மூலமான கௌடபாதகாரிகை முதலிய ப்ராசீன க்ரந்தங்களில் பௌத்த மதத்தைக் கொண்டு மற்றதார்க்கிகம் முதலிய பேத மதங்களைக் கண்டித்துவிட்டு, கடைசியில் ப்ரமத்திற்காதாரமாக அதிஷ்டான மொன்று கூடவில்லாமல் ப்ரமம் ஸம்பவிக்க மாட்டாதென்கிற ஒரு அம்சத்தை மட்டும் வித்யாஸமாகக் கொள்ளுகிறார்கள். மற்றப் படிக்கு மாயா வாதம் இரண்டு மதத்திலுமுண்டு. ஸம்வ்ருதி என்று பௌத்த மதத்தில் ப்ராந்தியை யுண்டுபண்ணுவதாகச் சொல்லுவது தான் அத்வைதத்தில் மாயையென வழங்கப்படுகிறது. அத்வைத மதத்தை யோகாசாரமதத்திற்கு பவ்யப்பட்டதென்று உரைத்திருப்பது ந்யாயந்தானென்பது யோகாசாரமதத்தை ஸூத்ரகாரர் நிரஸனம் செய்திருக்கு மதிகரணத்தின் சாங்கரபாஷ்யத்தின் கடைசி வாக்யங்களிலிருந்தே விளங்குமென்று ஒருவாறு சொல்லக்கூடும். நானென்னும் அறிவுக்காதாரமாக ஆத்மாவின் ஸ்தானத்தில் யோகாசாரர்களா லொப்புக்கொள்ளப்படும் ஆலய விஜ்ஞானம் க்ஷணிகமென்றும் நதீப்ரவாஹம்போல அதனுடைய ஸந்தானம் விச்சேதமின்றி பூர்வ வாஸனைகளுடன் உண்டாய்க்கொண்டே யிருக்கிறதென்றும் யோகாசாரர் கொள்கை; ஆத்மா ஸ்திரமென்பதும் ஒன்றே யென்றும் அந்த மதத்தின் கொள்கை. மற்ற வம்சங்களில் பேதமில்லை. தம்முடைய அத்வைத மதம் யோகாசாரத்திற்கு அனேக வம்சங்களில் ஒத்துமையா யிருப்பதை ஸ்ரீ சங்கராசாரியரே தெரிந்து கொண்டு மேற்சொன்ன ஸ்வபாவாதிகரணத்தில் காட்டியிருக்கிறார். அந்த வதிகரணத்தின் கடைசியிலுள்ள சிலவாக்யத்திற்கு ப்ரஹ்மஸ்ரீ நடேச சாஸ்திரிகளால் செய்யப்பட்ட தமிழ்மொழி பெயர்ப்பை இங்கேவரைகிறோம். "மேலும், விஜ்ஞானமானது தீபம் போன்று தன்னைப் ப்ரகாசப்படுத்தும் வேறொன்றினபேக்ஷையின்றித் தானே ப்ரகாசிக்கின்றது, என்று சொல்லும் பௌத்தனால் விஜ்ஞானமானது ப்ரமாணத்துக்கு விஷயமன்றென்றும் (அதைவிட வேறான) அதை அறிகின்றவனில்லை யென்றும் சொல்லப்பட்டதாக வாகும். அதாவது, கற்பாறையின் நடுவில் ஆயிரம் விளக்கு ப்ரகாசிக்கின்றது என்பது போலவாம். (அதுவோ பொருந்தாது. ஆனதுபற்றி விஜ்ஞானத்துக்கு ஸாக்ஷியை ஒப்பியே



...வேண்டுவதாக வாகிவிடுகிறது.) சங்கை. ஆம். இவ்விதம் தான். விஜ்ஞானமானது அனுபவரூபமாக விருப்பதுபற்றி பௌத்தர்களான எங்களுக்கு இஷ்டமான பக்ஷமே. உம்மால் சொல்லப்படுகிற தென்கிறோமெனின்? உத்தரம்—அவ்விதமில்லை என்கிறோம். ஏன்? அறியப்படும் பொருளைவிட வேறுபட்டவனும் சக்ஷுராதி அறிவுக் கருவிகளை ஸதானமாகக் கொண்டவனுமான புருஷனை யபேக்ஷித்து விளக்கு முதலியவற்றின் ப்ரகாசம் காணப்படுவதே அதன் காரணமாகும். சங்கை—ஸாக்ஷியான அறிகின்ற புருஷனை ஸ்வயம்ஸித்தன் (நித்யஸித்தன்) எனச் சொல்லும் வேதாந்தியினால் விக்ஞானமானது தானாகவே ப்ரகாசிக்கிறதென்கிற பௌத்தபக்ஷமே வேறு முறையில் ஒப்பப்பட்டதாக வாகிவிடுறது என்கிறோமெனின்? உத்தரம் அவ்விதமாகா தென்கிறோம். ஏன்? ஆலயவிக்ஞானத்தை உற்பத்தி யுள்ளதென்றும் அழிவுள்ளதென்றும் அனேகமென்றுமான பற்பல விசேஷமுள்ளதாக பௌத்தன் ஒப்புவதே அதன் காரணமாகும்? மறுபடியும் மறுபடியும் இரண்டுமதமு மொன்றாய் விடுகிறதென்று சங்கை பாஷ்யகாரர் மனத்திலுதித்துக்கொண்டே யிருக்கிறது. ப்ரபஞ்சத்தின் மித்யாத்வத்தையும், ஸ்வப்ந த்ருஷ்டாந்தத்தையும், ஸூத்ரகாரர் ஸ்பஷ்டமாய் தூஷிப்பதாலும் யோகாசார மதத்தைத் தூஷிப்பதாலும் அத்வைத மதமும் தூஷிதமாயிற்றென்று ஸ்வாமியின் கருத்து. யோகாசாரர்கள் ப்ரயோகத்தை விடட்டுமென்று வேடிக்கையான வசனம். ப்ரயோகமென்பதற்கு அனுமானமென்று பொருள்.

(இன்னும் வரும்)

---

# ஸ்ரீ வால்மீகி மஹர்ஷியும் ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகனும்

---

[ஸ்ரீ உப. வித்வாந் தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர்.]

[illegible]

கீர்வாண பாஷையில் அழகிய நடையில் காவ்யங்களை எழுதுகிற கவிகளுக்குள் முதன்மை வாய்ந்தவர் ஸ்ரீ வால்மீகி கவி ஒருவரே. '[illegible]' என்று எல்லா கவிகளாலும் புகழப்பட்ட சொற்சுவையுள்ள கவி சிகாமணியல்லவோ வால்மீகி பகவான். அவருடைய வாக்கின் மகிமையை பரிபூர்ணமாக நாம் அனுபவிக்க வேண்டுமானால் ஸ்ரீமத் ராமாயண மென்கிற முக்தாஹாரத்தில் நடுநாயகம்போல் விளங்குகின்ற ஸுந்தர

காண்டம் ஒன்றை கவனித்தால் போதுமானது. அடுத்தபடி, கிஷ்கிந்தா காண்டம். சொற்களின் அமைப்பிலும் அர்த்தங்களின் விந்யாஸத்திலும், ஸ்வபாவ வர்ணனத்திலும், விசித்திரமான சப்தாலங்காரங்கள் அர்த்தாலங்காரங்கள் இவைகளை சுலோகங்களில் இசைப்பதிலும், ரஸங்களை அலைமோதிக் கொண்டு கொந்தளிக்கச் செய்வதிலும், காவ்யங்களுக்குரிய ரீதிகளை ரஸங்களுக்கு அனுகுணமாகச் சேர்ப்பதிலும், அர்த்தத்தைச் சார்ந்த விருத்திகளை உள்ளபடி அமைப்பதிலும் அந்த வால்மீகி மஹாகவிக்கு ஒருவரும் ஒப்பாகமாட்டார்கள். இந்த விஷயம் ஸஹ்ருதயர்களுக்கு பிறர் சொல்லாமலே நன்கு விளங்கும். "ஒப்பற்ற கவனசக்தி யுள்ளவன் நான்" என்கிற கர்வமுள்ளவர்களின் உள்ளங்கூட இந்த ஸௌந்தரகாண்டத்தைப் பார்த்து, ஒரு சுலோகத்தைப் படித்த மாத்திரத்தினுலேயே கவிதா கர்வத்தை இழக்கும்படி செய்விக்கும். நான் ஒன்று மறியாதவனென்கிற எண்ணத்தையும் பயக்கும். விநயத்தை உண்டாக்கும். ஸௌந்தரகாண்டத்தில் திவ்ய தம்பதிகளின் ப்ரவாஸ விப்ரலம்ப ச்ருங்காரமானது ப்ரதிபாதிக்கப் பட்டிருக்கிறது. பூர்வானுராகம், மானம், ப்ரவாஸம், கருணம் என நான்கு வகைப்பட்டுள்ள விப்ரலம்பங்களுக்குள் ப்ரவாஸ விப்ரலம்பமே சிறந்ததென்று மஹாகவிகளின் கொள்கை. ஏனெனில் இதனாலேயே ஸம்போக ச்ருங்காரத்துக்கு பரிபோஷாதிசயமுண்டாகிறது. இதனால் பிந்தி தம்பதிகளுக்கு ஸம்பவிக்கப்போகிற ஸம்போக ச்ருங்காரமானது வரைகடந்த ஆநந்தக் கட்லாக பரிணமிக்கிறது. இந்த விஷயத்தை ஸ்ரீ காளிதாஸ மஹாகவியானவர் மேகதூதத்தில் ஏதஸ்மாந்மாம் குஶலிநமபிஜ்ஞாநதாநாத்விதித்வா மா கௌலீநாதஸிதநயநே மய்யவிஶ்வாஸிநீ பூ: | ஸ்நேஹாநாஹு: கிமபி விரஹே த்வம்ஸிநஸ்தே, த்வபோகாதிஷ்டே வஸ்துந்யுபசிதரஸா: ப்ரேமராஶீபவந்தி | ஶாபாந்தோ மே புஜகஶயநாதுத்திதே ஶார்ங்கபாணௌ ஶேஷாந்மாஸாந் கமய சதுரோ லோசநே மீலயித்வா | பஶ்சாதாவாம் விரஹகுணிதம் தம் தமாத்மாபிலாஷம் நிர்வேக்ஷ்யாவ: பரிணதஶரச்சந்த்ரிகாஸு க்ஷபாஸு || என்கிற சுலோகங்களால் துலக்கமாகக் காட்டி இருக்கிறார்.

ஸ்தாலீபுலாக நியாயத்தினுல் வால்மீகி மஹாகவியின் வர்ணன சாதுர்யத்தை எடுத்துக் காட்டிவிட்டு மேல் விஷயத்தை அனுஸரிக்கிறேன். பர்த்தாவினுடைய ப்ரவாஸகாலத்தில் பதிவ்ரதா ஸ்திரீகளின் நிலைமையை ஸ்வாதீநபதிகையாகவும் தத்காலத்தில் பர்த்ருவிச்லேஷ துக்கபாகினியாகவுமிருக்கிற ஸ்ரீ ஸீதாப்பிராட்டியின் துர்தசையின் வர்ணன வியாஜத்தினுல் எவ்வளவு அழகாக வால்மீகி கவி வர்ணித்திருக்கிறார் என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

உபவாஸக்ருஶாம் தீநாம் நிஃஶ்வஸந்தீம் புந: புந: |
பிநத்தாம் தூமஜாலேந ஶிகாமிவ விபாவஸோ: ||
பீதேநைகேந ஸம்வீதாம் க்லிஷ்டேநோத்தமவாஸஸா |
ஸபங்காமநலங்காராம் விபத்மாமிவ பத்மிநீம் |



வ்ரீடிதாம் து:கஸந்தப்தாம் பரிம்லாநாம் தபஸ்விநீம் |
அஶ்ருபூர்ணமுகீம் தீநாம் க்ருஶாமநஶநேந ச |
ஸுகார்ஹாம் து:கஸந்தப்தாம் வ்யஸநாநாமகோவிதாம் ||
நைஷா பஶ்யதி ராக்ஷஸ்யோ நேமாந் புஷ்பபலத்ருமாந் |
ஏகஸ்தஹ்ருதயா நூநம் ராமமேவாநுபஶ்யதி ||

என்று ஸ்ரீராமபிரானுடைய விச்லேஷ ஸமயத்தில் ஸம்பவித்திருக்கிற பிராட்டியின் துர்தசையை இவ்வண்ணம் வர்ணித்து, இவ்வண்ணமே பிராட்டியின் விச்லேஷ காலத்தில் ஸம்பவித்திருக்கிற ஸ்ரீராமபிரானுடைய சோசநீயமான தசையையும் வர்ணித்திருக்கிறார்.

ஸ தவாதர்ஶநாதார்யே ராகவ: பரிதப்யதே |
மஹதா ஜ்வலதா நித்யமக்நிநேவாக்நிபர்வத: ||
த்வத்க்ருதே தமநித்ரா ச ஶோகஶ்சிந்தா ச ராகவம் |
தாபயந்தி மஹாத்மாநமக்ந்யகாரமிவாக்நய: ||
தவாதர்ஶநஶோகேந ராகவ: ப்ரவிசால்யதே |
மஹதா பூமிகம்பேந மஹாநிவ ஶிலோச்சய: ||
த்வதத³ர்ஶநஜேநார்யே ஶோகேந ஸ பரிப்லுத: |
ந ஶர்ம லபதே ராம: ஸிம்ஹார்தித இவ த்விப: |
அநித்ர: ஸததம் ராம: ஸுப்தோऽபி ச நரோத்தம: |
ஸீதேதி மதுராம் வாணீம் வ்யாஹரந் ப்ரதிபுத்யதே ||

என்று உவமையை எடுத்து உரைப்பதிலும் தனக்குள்ள நிகரற்ற ஸாமர்த்தியத்தை இந்த காண்டத்தில் காண்பித்திருக்கிறார்.

யதா ஶசீ மஹாபாகா ஶக்ரம் ஸமுபதிஷ்டதி |
அருந்ததீ வஸிஷ்டம் ச ரோஹிணீ ஶஶிநம் யதா |
லோபாமுத்ரா யதாகஸ்த்யம் ஸுகந்யா ச்யவநம் யதா |
ஸாவித்ரீ ஸத்யவந்தம் ச கபிலம் ஶ்ரீமதீ யதா |
ஸௌதாஸம் மதயந்தீவ கேஶிநீ ஸகரம் யதா |
நைஷதம் தமயந்தீவ பைமீ பதிமநுவ்ரதா ||
ததாஹமிக்ஷ்வாகுவரம் ராமம் பதிமநுவ்ரதா ||

என்று ரஸானுகுணங்களான ரீதிகளையும் வ்ருத்திகளையும் அர்த்த காம்பீர்யத்தையும் செய்யுளில் அமைக்கும் விஷயத்தில் இந்த கவி ஸார்வபௌமனைப்போல் ஒருவரும் வல்லமை யுள்ளவர்களாக ஆகார்கள். கீழே எழுதப்படப்போகிற சுலோகங்களை சற்று கவனிக்க வேண்டுகிறேன்.

காஸாந்வித தரங்காணி ஸஞ்ஜாதாநி ஹ்ரதயாந்தாநி ஸமந்த்ர தீரஜாநி |
கநகவிசித்ரஹார ஹம்ஸிதாநீ விஹாரயோக்ய ஹீந காநநாநி ||

*நிசாமயந்தே: ஸுப்ரவஸந்தோஷவேதி நிசாந்தம் ஸம்ஸாரஸந்தோஷவேதி ।*
*ஸம்ஸாரபஞ்சாக்ஷரஸந்தோஷவேதி காஞ்சா ஸகார ப்ரியஸந்தோஷவேதி ॥*
*ஸஹஸ்ராணி ஸஹஸ்ராணி ஸஹஸ்ராணி ஸாஸ்த்ராணி யதீயானி ஸஹஸ்ராணி ஸாஸ்த்ராணி ।*
*நவேத்ராவதாரஸ்த்ரம ஜாலதாரா: ப்ரியா விஹாரஸ்பதி: ஸ்வஸ்த்ரா: ।*

என்று இவ்விதமான வாங்மய சந்திர கிரணங்களால் மனிதர்களின் ஹ்ருதய குஹைகளிலுள்ள அஜ்ஞானாந்தகாரத்தை ஒட்டி ஞானக்கண்ணைத் திறக்கும்படி செய்த இந்த மகானுபாவனைப்போல் உலகத்திற்கு உபகாரம் செய்தவர் யார்? இதற்கு அடுத்தபடியாக வாங்மய மதுதாரையினால் உலகத்திலுள்ள சேதன வர்க்கங்களை ஆநந்தவெள்ளத்தில் அமிழ்த்தி சுகத்தைக் கொடுத்தவன் கவி சிகாமணியான காளிதாஸன். இந்த காளிதாஸனுக்குப் பிறகு வந்துள்ள கவிகளுக்குள் ஸ்ரீ நிகமாந்த மகாதேசிகனுக்கு ஈடான கவி ஒருவருமில்லை. பற்பல விஷயங்களில் காளிதாஸனைக்கூட இவர் அதிக்ரமித்திருக்கிறார்.

இந்த மகாதேசிகனுக்கு கவிதார்க்கிக ஸிம்ஹன், ஸர்வதந்திர ஸ்வதந்திரன், வேங்கடநாதன், வேதாந்தசார்யன் என்கிற நான்கு பெயர்கள் உண்டு. கவனம் செய்பவர்கள் கவிகள். பகவத்கீதை எட்டாவது அத்தியாயத்திலுள்ள ஒன்பதாவது சுலோகத்தில் '*கவிம்*' என்கிற பதத்திற்கு ஸ்ரீ பகவத் ராமானுஜ பாஷ்யத்தில் '*ஸர்வஜ்ஞம்*' என்று அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. கீதா தாத்பர்ய சந்திரிகையில் '*க்ராந்ததர்சீ கவிரித்யபிதானாத் கவிசப்தஸ்ய ஸர்வவிஷயஸாக்ஷாத்காரவத்வாத் உத்தரவிவரணேன ஸர்வஜ்ஞ இதி*' என்று ஸ்ரீ தேசிகன் கவிசப்தார்த்த விவரணம் செய்திருக்கிறார். சங்கர பாஷ்யத்தில் '*கவிம், க்ராந்ததர்சினம்*' *ஸர்வஜ்ஞம்*, என்று அர்த்தம் கூறப்பட்டிருக்கிறது. ஆநந்த தீர்த்தீய பாஷ்யத்தில் '*கவிம்*' *ஸர்வஜ்ஞம்* '*யஸ்ஸர்வஜ்ஞ:*' *இதி ச்ருதே: 'ஸம்கவிஸ்ஸர்வவேத்தா, இதி அபிதானாத்*' என்று கவி சப்தார்த்தம் கூறப்பட்டிருக்கிறது. இந்த பாஷ்யங்களால் எவர்கள் அதீந்திரியார்த்த ஸாக்ஷாத்கார முள்ளவர்களோ அவர்களே கவிகள். காவியங்களைச் செய்பவர்களும் கவிகள். தர்க்கங்கள் வாதங்கள். *தானி குர்வந்தி ஜயந்தி இதிவா தார்க்கிகா:*, கவிகளுக்குள் சிறந்தவர் கவி ஸிம்ஹன், தார்க்கிகர்களுக்குள் சிறந்தவர் தார்க்கிக ஸிம்ஹன். அல்லது கவியாகவும் தார்க்கிகராகவுமிருப்பவர் கவிதார்க்கிகர் என்று விசேஷணோபயபத கர்மதாரய ஸமாஸம் செய்து '*கவிதார்க்கிக: ஸிம்ஹ இவ, கவிதார்க்கிக ஸிம்ஹ:*, என்று *உபமிதஸமாஸ*த்தையும் இங்கு ஆதரிக்கலாம். அல்லது *தார்க்கிக* என்பது கவிகளுக்கே விசேஷணம். *தார்க்கிகாஸ்ச கவிதார்க்கிகா: 'மயூரவ்யம்ஸகாதயஸ்ச*' என்கிற ஸூத்ரத்தால் ஸமாஸம்—தார்க்கிக சப்தத்திற்கு *பர்நிபாத*மானது அங்கீகரிக்கப்படிருக்கிறது. *மயூரவ்யம்ஸகாதிகண*த்தில் இந்த சப்தம் காணப்படாமலிருந்த போதிலுங்கூட அது *ஆக்ருதிகண*மாதலால் இந்த சப்தமும் அந்த கணத்தில் சேர்க்கப்பட்டதென்று அபியுக்தர்களின் அபிப்பிராயம். அல்லது *கவயஸ்ச தார்க்கிகாஸ்ச கவிதார்க்கிகா:* என்று



த்வந்த்வ ஸமாஸம் செய்து *தேஷாம் ஸிம்ஹ:* ஸிம்ஹம்போல் பயங்கரராக இருப்பவராதலால் *கவிதார்க்கிக ஸிம்ஹ:* என்னும் விக்ரஹ வாக்கியம் சொல்லலாம். இந்த மஹா தேசிகனிடத்தில் *ஸிம்ஹ*த்வாரோபமானது கவிகளிடங்களிலும் கஜத்வாரோபத்திற்குக் காரணமாக இருக்கிறது. சிங்கத்தைக் கண்டால் யானைகள் நடுங்கி வீரிடுவதுபோல் பிரதிவாதிகளாக ஏற்படுகிற கவிகளும் தார்க்கிகர்களும் இந்த மகாதேசிகனைக் கண்ட மாத்திரத்தினாலேயே நடுங்குவதுடன் தங்களுக்கு இவருடன் வாதம் செய்வதில் திறமை இல்லாமையை தங்களுடைய வாக்கினாலேயே வெளி இட்டுக்கொண்டு ஓடிவிடுகிறார்களென்று கருத்து. *கஜஸ்வாரோப*மானது *ஸிம்ஹஸ்வாரோப*த்தை நிமித்தமாகக் கொண்டிருப்பதால் *பரம்பரித ரூபகம்*. இந்த விக்ரஹ வாக்கியமே அபியுக்தர்களுக்கு அபிமதமாகும். இந்த அர்த்தத்தை திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டே *ஸங்கல்ப ஸூர்யோதய நா*டகத்தில் '*கவிதார்க்கிக கலப ஸம்ஸத் கண்டீரவ ஸிம்ஹம்*' என்று அபியுக்தர் அருளிச் செய்தார்.

எல்லா தந்திரங்களிலும் அதாவது காணாதம், ஆக்ஷபாதம், பாணினீயம், பாதஞ்ஜலம், ஜைமினீயம், ஹைரண்ய கர்ப்பம், காபிலம், சைவம், வைஷ்ணவம், ஜ்யோதிஷம், ஆயுர்வேதம், வாதாப்யாயனீயம், முதலிய சாஸ்திரங்களில் தடையற்ற ஞானசக்தியுடன் கூடி இருப்பதுடன் அந்தந்த சாஸ்திரங்களில் ப்ரமாணஸித்தமான அர்த்தங்களை ஸ்தாபிப்பதற்கும் விருத்தார்த்தங்களை நிராகரிப்பதற்கும் வல்லமையுள்ள மேதா சக்தியையுடையவர் என்று கருத்து. இந்த விஷயத்தை தாமே ஸ்ரீ மகாதேசிகன் '*ஸர்வஜ்ஞஸ்ய தஸ்யைதந்த்ராகராவே*' என்று அருளிச்செய்தார். இப்படிப்பட்ட ஸாமக்ரியுடன் கூடியவரும் லோகோத்தரமான ப்ரதிபையுடன் கூடியவருமான இவருக்கே லோகோத்தரமான காவ்யங்களை இயற்றுவதில் ப்ரௌடிமை ஏற்படும். பரிமிதப்ரஜ்ஞையுள்ளவனுக்கு மஹனீய காவ்யங்களைச் செய்வதில் வைதக்த்யமுண்டாகாது. கவித்வத்திற்குக் காரணம் ஒரு சக்தி விசேஷம். அது பிறவியிலேயே ஈசுவர ப்ரஸாதத்தினால் உண்டாக வேண்டுமே ஒழிய பலாத்காரத்தாலுண்டாகாது. ஸங்கீதம் கணனம் கவித்வம் இம்மூன்றும் இயற்கையிலேயே ஒருவனுக்கு அமையவேண்டும். மற்ற வித்யைகளோ கலைகளோ அப்யாஸாதிக்யத்தாலும் முயற்சியினாலும் ஸாதிக்கக் கூடியவைகளாக ஆகும். இந்த விஷயத்தைக் கருத்தில் கொண்டே காவ்யப்ரகாசத்தில் மம்மடபட்டன்,

*நியதிக்ருதநியமரஹிதாம் ஹ்லாதைகமயீமனன்யபரதந்த்ராம், நவரஸ*
*ருசிராம் நிர்மிதிமாததீ பாரதீ கவேர்ஜயதி ।*

என்று மங்கள ச்லோகம் செய்தான்

"*சக்தி: கவித்வபீஜம் ஹி வ்யுத்பத்திரபி ஸம்ஸ்க்ரியா ।*
*யயா விநா தவ ப்ரோக்தம் காவ்யம் ஹாஸ்யாவதாரவி ॥*
*வக்த்ரே தவ கிமௌரவ்யபாதிஸ்ஸ்ருதி கிம் கயனாத ।*
*ப்ரஸாரிதம் வபும் தஸ்ய ஸாமர்த்யேவ தவாம்பய: ॥*

[illegible]

என்கிற வசனங்களின்படி கவிகளுக்கு ஸ்வாதுவாக இருக்கிற ப்ரதிபை யானது ஸ்ரீ நிகமாந்த மகாதேசிகனுக்கு [illegible]யாக இருக்கிறது. [illegible]

என்கிற அபியுக்தருடைய வசனத்தை அனுஸரித்து ப்ரௌடியும் [illegible]மும் பாண்டித்யமும் வைதக்த்யமும் ஸ்ரீ தேசிகனுடைய திவ்ய ஸூக்திகளில் நன்றாகக் காட்டப்பட்டிருக்கின்றன. நவரஸங்களுக்குள் [illegible] ரஸமும் கருணாரஸமும் சாந்தரஸமும் லலித பதவின்யாஸத்துடன் கூடினபத ரசனையினால் காட்டத்தக்கவைகள். இந்த விஷயத்தில கவி ஸமயத்தை கொஞ்சமேனும் அதிக்கிரமிக்காமல் ஒவ்வொரு கிரந்தங்களிலும் ஸ்வாமி அதிஸுந்தரமாக அக்ஷரங்களையும் பதங்களையும் அமைத்து அந்த அந்த ரஸங்களை அந்த அத்த ஸந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு தெளிவாக ப்ரகாசிக்கச் செய்திருக்கிறார். ரஸங்களை ஸ்புரிக்கச் செய்வதிலும், ரஸானுகுணமான சப்த ரசனையிலும் அர்த்த வின்யாஸத்திலும், காளிதாஸ மஹாகவியைப் போலவே ஸ்ரீ வால்மீகி கவியைப் பின்பற்றிச் சென்றிருக்கிறார். இன்னும் சற்று ஊன்றிப்பார்த்தால் அந்த இரண்டு கவிகளுக்குள் [illegible] கவியாக விளங்குகிற வால்மீகி கவியோடு ஸமானமாகவோ அல்லது மேலாகவோ, சொல்லக்கூடிய வாக்வைகரியுடன் கூடியவராகவே ஸ்ரீதேசிகன் காணப்படுகிறார். உதாஹரணமாக ச்ருங்கார ரஸத்தை எடுத்துக்கொள்வோம்—வால்மீகி மஹாகவி இந்த ரஸத்தை ஸ்ரீராமாயணத்தில்,

[illegible]



[illegible]

என்று அழகாக நிரூபித்திருக்கிறார். ஸஹ்ருதயர்களுடைய சித்தமே இந்தவிஷயத்தில் ஸாக்ஷியாதம். இதே ரஸத்தை காளிதாஸன் மேகதூதத்தில்,

[illegible]

[illegible]

என்று நிரூபித்திருக்கிறான். வால்மீகி மஹாகவியின் வாக் சாதுர்யத்தையும் இந்த காளிதாஸனுடைய ரஸ நிரூபணபங்கியையும் ஸஹ்ருதயர்கள் கவனிக்க வேண்டும். அடுத்து கவனிக்கப்படத்தக்கது ஸ்ரீதேசிகன் திவ்யஸூக்தி. இதே ச்ருங்காரத்தை ஸ்ரீதேசிகன் அதிமனோஹரமாக நிரூபித்திருக்கிறார். உதாஹரணமாக.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

இந்த சுலோகங்களிலுள்ள ரஸஸ்புரணம் ஸஹ்ருதய ரஞ்ஜகமானது. சப்த லாலித்யம் அர்த்தபுஷ்டி ரஸபரிபூர்த்தி, ரஸானுகுணமான வைதர்ப்பீரீதி,

கைசிகீவிருத்தி, த்ராக்ஷாபாகம், பதங்களுக்கு பரஸ்பரானு குண்யரூபமான சய்யை, அர்த்தாலங்காரங்கள், சப்தாலங்காரங்கள் இவைகள் அனைத்தும் நான் முன்னே நான் முன்னே என்று போட்டியுடன் முன்னிலையில் வந்து நிற்கின்றன. காவ்ய பாவனையினால் பரிபக்குவமான புத்தியையுடைய மஹான்கள் நன்கு விசாரணைசெய்து மஹாகவிகளின் ப்ரபந்தங்களை சீர்தூக்கிப் பார்ப்பார்களேயாகில் ஸர்வஸம்மதத்தாலும் வால்மீகி, காளிதாஸன் இவர்களுடைய கிரந்தங்களைவிட ஸ்ரீநிகமாந்த மகாதேசிகனுடைய திவ்ய ஸூக்திகளே அப்யாவதி தங்கள் என்று நிச்சயமாகப் பகர்வார்கள் என்பதில் ஸம்சயமில்லை.

[illegible]

(இன்னும் தொடரும்.)

---

## மதங்களின் சாயைகள்.

---

[ஸ்ரீ. உப. வெ. ராம. நரஸிம்ஹாசார்யர்]

[ஸம்பு 20.ஸஞ்சிகை 7—12, பக்கம், 190. தொடர்ச்சி.]

சரீரத்தின்வளர்த்திக்கு ஆஹாரம் அவச்யமாயிருப்பதுபோல மனதின் அபிவிருத்திக்கு மதம், அவச்யமாகின்றது. மனமும் உடலுஞ் சேர்ந்தே மனிதனாயிருக்கின்றமையால் மனதை பட்டினிபோட்டு வைத்து, உடம்பை ஊட்டி வளர்ப்பதினால் மட்டும் பூர்ணமான புஷ்டியை மனிதன் அடைந்துவிட முடியாது. பசித்த வேளைக்கு சோறில்லை யென்றால் வயிறு பதைக்கின்றது. பசி அடங்கிய பின் மதமில்லை யென்றால் மனது துடிக்கின்றது. ஒரு சில பொழுது சோறேயில்லை யென்று தீர்ந்து விடுமானால் அப்போது அப்பசியின் வாதனையும் மறைந்து போகும்படி மனது மத விசாரணைக்குத் தலைப்படுகிறது. வயிற்றுப் பசியை ஆற்றுவதற்கென்று வெளியிலிருந்தே உணவுப்பொருட்கள் தருவிக்கப் படுவதுபோல மனப்பசியை ஆற்றுவதற்கும் இதுகாறுமுள்ள பழக்கத்தினால் அதனுள் அடங்கிக் கிடக்கின்ற பிராத்யக்ஷிக விஷயங்களை யன்றி இன்றுவரை அதற்கு எட்டியிராத பரோக்ஷ வஸ்து விசாரணைதான் அபேக்ஷிதமாகின்றது போலும். மாந்தர்கள் தந்தமக்குக் கிடைத்த வரையில் உணவு வகைகளை உட்கொள்ளுகின்றனர். மதஸ்தர்களும் அவரவருக்கு எட்டிய வரையில் தத்வங்களை ஏற்றுக்கொள்ளுகின்றனர். இன்றைக்குக் கிடைத்திருப்பதைவிட உயர்ந்தான உணவுப் பொருள் நாளைக்குக் கிடைக்குமானால் இன்றைய வாஸனையைக் கொண்டு அப்போது அதனைத் தள்ளி விடுகிறதில்லை. இதுபோலவே மத விஷயத்திலும் நெடுநாளாகப் புலப்படாமல் மறைந்தே கிடந்த தத்துவமேதேனும் தக்க பிரமாணங்களின் மூலமாக என்றைக்கேனும் வெளியாயிற்றானால் அப்போது பிராசீன வாஸனைக்கு வசப்பட்டு அவ்வபூர்வார்த்தத்தை நிராகரித்து



விடாமல் யதாப்பிரமாணம் அதனை அங்கீகரிப்பது தான் யுக்தமாகும். இப்படி பிற்காலத்திய பிரமாணங்களின் ஸஹாயத்தினால் கிடைக்கின்ற புதிய உண்மைகளை ஏற்றுக்கொள்ளுவதுபோல இவற்றோடு முறண்படுகின்ற பழைய கொள்கையை அவச்யமான ஓரளவு தளர்த்திக்கொள்ளவும் வேண்டும். இன்றேல் பகுத்தறிவென்பது வளருவதற்கு இடம் பெறுமற் குன்றிப்போய் விடும். இக்குறை கூடாதென்றே நமது பாரத தேசத்திலும் இதர தேசங்களிலுங்கூட உள்ளவர்களான மதாசிரியர் பலரும் புதிது புதிதாகத் தமக்குக் கிடைத்துள்ள பிரமாண வாக்யங்களைக்கொண்டு தாம் கண்டறிந்த தத்வங்களைப்பற்றிய ஸித்தாந்தங்களை எவ்வளவு எதிர்ப்பிருந்தாலும் அதனைப் பெரிதாக வெண்ணாமல் பொருத்துக்கொண்டு சோர்வில்லாமல் வெகு ஜன ஆதரவைப் பெறக்கூடும் வகையில் பிரசாரம் செய்து கொண்டே போய் முடிவில் பலத்தையும் பெற்று விடுகின்றார்கள். தத்வ நிர்ணய விஷயத்தில் புத்தி சஞ்சலப்பட்டுக் கொண்டு அலைவது அனுசிதம் தானென்றாலும் என்றைக்கோ யாத்ரா வசமாய் அடிவைத்த ஓரிடத்தை விட்டு ஒரு சாணளவுகூட அசையமாட்டேனென்று சண்டித்தனம் பண்ணுவதும் ஏற்கக்கூடியதாகாது. அர்த்த தத்வங்கள் ஸித்திப்பதெல்லாம் பிராயேண பிரமாண பலத்தை அனுஸரித்ததாயிருக்கின்றது. பிரமாணகெதியோவெனில் உத்தரோத்தரம் விசித்திரமாகப் பிரவிருத்தித்துக் கொண்டிருக்கின்றது. இனி பண்டை காலத்திய மாட்டு வண்டியை விட்டு வேறொன்றைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டேனென்று பிடிவாதம் பண்ணினால் வைமானிகர்போல ஆகாய வீதியில் உலாவுவதற்கு வகையேது. யாத்திரிகருக்கு யானங்கள்போல விமர்சகர்களுக்கு பிரமாணங்கள் புதிது புதிதாகத் தோன்றிக்கொண்டே வருகின்றதன்றோ? இவ்வுண்மையை யுணர்ந்து தான் நம்பூர்வாசிரியர்கள் பிரமாணங்களைப் பற்றிய வியவஸ்தைகளெல்லாம் காலகெதியை அனுஸரித்திருக்கின்றனவென்றும் ஒரு காலத்தில் காணப்படாமற் கிடந்த பிரமாண மொன்றை வேறு ஸமயத்தில் கண்டறிந்து தாராளமாய் அங்கீகரிக்கக் கூடுமென்றும் இப்படியே ஒருபொழுதில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது மற்றொரு பொழுதில் பஹிஷ்கரிக்கப் படலாமென்றும், ஆகவே பிரமாண வியவஸ்தைகளெல்லாம் தாத்காலிகங்களே யன்றி சாச்வதங்களல்ல வென்றுஞ் சொல்லியிருக்கின்றனர். இதற்கு ஸ்ரீ நியாய பரிசுத்தியிலுள்ள வாக்கியமொன்றை உதாஹரணமாகக் கூறலாம்.

"[illegible] பஹிஷ்க்[illegible]"

இந்த வாக்கியம் மதவாதிகள் எவரெவர் எதெதை பிரமாணமாக வைத்துக் கொண்டிருக்கின்றனரென்கிற வியவஸ்தையைக் காட்டிய அவஸரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதன் பொருளோவெனில்? இன்றைக்கு கண்முன்னிருக்கின்ற பிரமாணங்கீகாரத்தின் ரீதியேதானிது. முடிவற்ற முன்பின்

காலங்களில் எவர் எதை பிரமாணமாக அங்கீகரித்தார் அல்லது அங்கீகரிப்பா ரென்றோ, எவரெதை பஹிஷ்கரித்தார், அல்லது பஹிஷ்கரிப்பாரென்றோ தெரிந்து சொல்லுவதற்கு முக்காலத்தையும் முற்றுங் காண்கின்ற அவ்வீசனை யன்றி வல்லவர் வேறு ஒருவருளரோ ?

இதனால் பிரமாண வியவஸ்தைகள் காலபேதத்தில் மாறக்கூடியவைகளே யென்பது விசதமாக வில்லையா ? இனி இதனை யநுஸரித்து பிரமேய நிர்ண யங்களும் வேறுபட்டே தீருமென்று சொல்ல வேண்டியதில்லையே ? எனவே, பௌராணிக உதி சுஹ்ரு-வமத : சுய-ு : விஸாஞ :, தக்க பிரமாணங் களின் வாயிலாகத் தோன்றியவையென்று அங்கீகரிக்கப்பட்டிருக்குமவை களே ஸித்தாந்தங்கள், எனப்படுகின்றமையால் காலதேச புருஷபேதாதிகளி னால் மாறிக்கொண்டிருப்பது ஸித்தாந்தங்களுக்கு இயற்கையே, என்றதா யிற்று. ஆனால் இப்படிப் பிரமாணாதீனமாக விபரிணமிப்பது (வெவ்வேறு விதமாக மாறிக்கொண்டிருப்பது) ஸித்தாந்தங்கள் யாவற்றிற்கும் ஸாதாரண மான ஸ்வபாவமே தானென்றாலும் எந்த ஸித்தாந்திகளும் இம்மாறுதலை இலேசாக அங்கீகரித்து விடுவதுமட்டுமில்லை. அவரவருக்குத் தாம் தாம் அவ லம்பித்திருக்கின்ற கொள்கையின் கண்ணுள்ள அபிமானமானது அவர்களை புதிதாகத் தலையெடுக்கும் கொள்கைகள் தலைதூக்காமல் அமுக்கிவிடவேண்டு மளவிற்கு எதிர்த்துப் போராடும்படி தூண்டிவிடுகின்றது. அதனால் எத்தகைய மேதாவிகளினால் தானாகட்டும் எத்துணை ருஜுவான பிரமாண மூலமாகத் தானாகட்டும் ஏதேனுமொரு ஸித்தாந்தம் புதிதாகக் கண்டு பிடித்துப்பிரசாரம் செய்யப்படுமானால் ஆரம்பத்தில் அதனை இதர ஸித்தாந்திகள் பலருமொன்று கூடி அடியோடு எதிர்த்தே தீருவார்கள். இது ஸித்தாந்தங்க ளெல்லாவற்றிற் கும் பொதுவாக ஆரம்ப ஸமயத்திலுள்ளதொரு துர்தசை. ஆனாலும் இது நீடித்து சாச்வதமாக நின்றுவிடுவதில்லை. தாம் கண்டறிந்த புதிய கொள் கையை ஜனங்களிடையே பரப்புவதற்கு முற்பட்டவர்களான மேதாவிகள் அவ்வெதிர்ப்பிற்கு அஞ்சி தம் பிரயத்தினத்தை நிறுத்திவிடுகிற தென்பதில்லா மல் முடிவுவரை தமது பிரசாரத்தை சோர்வின்றி செய்துகொண்டே போகிற தீரஸ்வபாவமுள்ள வீரர்களன்றோ ? ஆதலால் ஆரம்பத்தில் அப்புதிய ஸித் தாந்தத்தை முற்றிலுந் தவறென்று அடியோடு பிரதிக்ஷேபித்தவர்களான பிரதி பக்ஷிகள்கூட காலக்கிரமத்தில் அரைவாசியாகவேனும் அதனை அங்கீ கரிக்கவேண்டிய அவஸரத்தை அடைந்து விடுகின்றனர். அப்போது அவர் களை நெருங்கி தடஸ்தர் ஒருவர் இப்படியொரு கேள்வி கேட்கின்றதாக வைத்துக்கொள்வோம். ஐயா, முன் அவர் சொல்லியதை முற்றிலும் தப்பென் றீரே, இப்போது அதைப்பற்றி உமது அபிப்பிராயமென்ன ? என்று கேட் டால் அவர் என்ன சொல்லுகின்றார். ஆம் அவர் சொல்லுவதில் ஏதோ உண்மையிருக்கின்றது. அதனை யாம் மறுக்கின்றோமில்லை. ஆனால் சொல்லு வதை ஒழுங்காய்ச் சொல்லாமல் அறைகுறையாகவா வழங்குவது ? விஷயத் தைக் குறையின்றி பூர்த்தியாகச் சொன்னாலன்றோ மனமாற ஏற்றுக்கொள்ள



முடியும் ? என்று முன்னிருந்த காரம்மாறி சற்று வழவழவென்று விடை கொ டுக்கின்றனர். இது ஸித்தாந்தங்களுக்கு முன் தசையைவிட சற்று நல்லதாக இரண்டாவது தசை இருக்கிறதென்னலாம். இதற்கு மேலும் அம்மேதாவிகள் இனியும் விடோம், என்று இழுத்துப்பரித்துக்கொண்டுநின்று மன்றாடுகின்றமை யினால் அச்ஸித்தாந்தங்களை ஸர்வஸமயிகளும் தலைகுனிந்து ஏற்றுக்கொள்வதற் கான ஒரு நல்லதசையை அவைகளடைந்து விடுகின்றன. இது பிரபலமான ஸித்தாந்தத்திற்கெல்லாம் பொதுவாக வுள்ளதொரு உயர்ந்த தசை. இப் போது முன் இவற்றை முற்றிலும் மறுத்தும் அரைகுறையாக அங்கீகரித்து மிருந்தவர்களிடஞ் சென்று ஐயா என்ன செய்தி ? இப்போதென்ன சொல்லு கின்றீர் ? என்று கேட்டால் அதற்குக் கிடைக்கின்ற பதில்தான் நம்மைத் திடுக்கிடச் செய்யும். அவர்கள் என்ன சொல்லுகின்றார்கள் ?" ஆ, இவ ரென்ன எவருங் காணாத புதிய விஷயத்தை நூதனமாய்க் கண்டுபிடித்துச் சொல்லிவிட்டார் ? இது இருநூறு ஆண்டுகளுக்கு முன்னாடியே நாங்கள் நிர்ணயித்து வைத்திருக்கின்ற பழைய பாடமேயன்றி இதிலொன்றும் புதிய அம்சமேயில்லை, என்பதுதான். ஸ்தாபகர்களுடைய விடாமுயற்சியால் ஸித் தாந்தங்களுக்கு ஸர்வஸமயிகளும் ஏற்றுப் போற்றும்படி இத்தகைய ஒரு உத் தமமான தசை ஸித்திக்கலாகின்றது. இந்த இரஹஸ்யத்தை நியாயஸூத்தி ரம், அதன் பாஷ்யம், அவற்றின் விமர்சனரூபமான நியாய பரிசுத்தி முதலான கிரந்தங்களில் மிகத் தெளிவாக விளக்கியிருப்பதைக் காணலாம். அவைகள் தெரிவிக்கின்ற அர்த்த ஸாரமென்னவெனில் ?

பிரதி தந்திர ஸித்தாந்தம், அப்யுபகம ஸித்தாந்தம், ஸர்வதந்திர ஸித் தாந்தம், என்று பொதுவாக ஸித்தாந்தங்கள் மூன்று வகையா யிருக்கின்றன. இவற்றுள் வாதத்திற்கு முனைந்திருக்கின்றவர்களான வாதிப் பிரதிவாதிகள் எல்லோராலும் ஒருமிக்க ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்ற ஸித்தாந்தம் ஸர்வ தந்திர ஸித்தாந்தமாகும். விவரித்துக் கூறவேண்டுமானால் தக்க அத் தாக்ஷி ஏதேனுமொன்றைக் கொண்டுதான் வஸ்துக்கள் ஸித்திபெறவேண்டும் என்று ஒரு விதியுண்டு. இது ஸமயவாதிகள் எல்லோராலும் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்ற கொள்கையேதான். ஸமயிகள் எவரும் பிரமாணமின்றியும் பிரமேயம் ஸித்திக்கலாகுமென்று சங்கிப்பதில்லையே ? ஸர்வ சூன்யவாதி கள் கூட வியவஹாரத்திற்கு வேண்டிய அளவிற்காவது பிரமாணப் பிரமேய வியவஸ்தைகளை அங்கீகரிக்கின்றன ரன்றோ ? ஆதலால் பிரமாணத்தினாற்றான் பிரமேயம் ஸித்திக்கலாகும் என்பது போன்றதை ஸர்வதந்திர ஸித்தாந்த மென்னலாம். நிற்க, குறிப்பிட்ட யாதாமொரு மதத்தில் மாத்திரம் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கையிலும் மற்றைய ஸமயிகள் பலராலும் நிராகரிக்கப்பட் டிருக்குமானால் அக்கொள்கையே பிரதிதந்திர ஸித்தாந்த மெனப்படுகின்றது. வையாகரணருக்கு ஸ்போடம், பவுத்தருக்கு க்ஷணபங்கம், ஜையினருக்கு ஸப்தபங்கி, வேதாந்திகளுக்கு ஈசன் ஸர்வப்பிரபஞ்ச சரீரியாயிருத்தல், இத் யாதிகளை உதாஹரணமாகக் கொள்ளலாம். இவற்றை அவரவர் தவிர மற்ற எல் லோரும் ஒருமிக்க மறுக்கின்றனரன்றோ ? ஆதலால் இவற்றுள் ஒவ்வொன்றும்

முறையே ஒவ்வொருவருக்குப் பிரதிதந்திர ஸித்தாந்தமென்க. ஆனால் இவைகளை அன்னிய ஸித்தாந்திகள் ஆக்ஷேபிக்கும் வரையில்தான் பிரதிதந்திர ஸித்தாந்தமென்னலாம். எச்சந்தர்ப்பத்திலேனும் வேறு ஒரு புறச்சமயத்தினரும் இதனை அங்கீகரித்து விடுவாராஞல் அப்போது இது அல்லது இவைகளே அப்யுபகம ஸித்தாந்தமாக மாறிவிடும். இவ்வளவு மட்டுமல்ல பிறருடைய அங்கீகாரம் அதிகரிக்க காலக்கிரமத்தில் ஸர்வதந்திர ஸித்தாந்தமாகவும் முடிவடைந்துவிடும். ஏனெனில், எம்மதத்திலும் அன்று வரையிலில்லாத சில மாறுதல்களை அபூர்வமாகச் செய்து வைக்கின்றவர்களான ஆசிரியர்கள் ஆங்காங்கு அவதரிக்கின்றனரன்றே? இன்றேல் முதன் முதலிற்றோன்றிய ஸித்தாந்தமொன்றையின்றி மாறுபடும் சமயக்கொள்கை யொன்றும் தலையெடுக்க நியாயமிராதே? அப்படி யொருவர் புதிதாகக் கொண்டுவந்த கொள்கையை மற்றவர் ஏற்றுக்கொள்ள லாகாதென்பதுமில்லை. க்ஷேத்திரங்களில் விதையை விதைப்பதும், நாற்றை நடுவதும், பூண்டைப் பறிப்பதும், களையைக்கிள்ளி யெறிவதும் போல மதங்களிலும் நல்லதை ஏற்றுக்கொள்வதும் அல்லாததைத் தள்ளிவிடுவதும் இன்றைக்கும் இயற்கையாகக் காணலாகின்றதே? ஸித்தாந்தங்களென்பதெல்லாம் அபிமான மூலங்கள் தானே? இனி அபிப்ராயமென்பது மாறுபடுந்தன்மையதாதலின் மூலமான அபிப்பிராயம் மாறும்போது அதனாலாகிய ஸித்தாந்தங்களும் அதற்குத் தகுந்தாற்போல கிரமமாக மாறிக்கொண்டு வருவது ஸஹஜந்தான் ஆதலால் ஒருபொழுது பிரதிதந்திர ஸித்தாந்தமாகக் கருதப்பட்டிருந்தது மற்றொரு பொழுதில் அப்பியுபகம ஸித்தாந்தமாகமாறி முடிவில் ஸர்வதந்திர ஸித்தாந்தமென்று சொல்லும் வரைக்கும் சென்று நிற்குமாம். ஆனால் அப்யுபகம மெனப்படுகின்ற அரைகுறையான நடுவிலுள்ள நிலையொன்று எதற்கும், பிரதிதந்திரமே ஸர்வதந்திரமாக நேரில் மாறிவிடலாகாதோவெனில்? ஆகாது. ஆனால் அதனை முற்றும் ஆக்ஷேபித்தவர் ஒருபடிகூட இல்லாமல் திடீரென்று பூர்ணமாக ஒப்புக்கொண்டு விடுவரோ? அவர்களுக்குள்ள இறுமாப்பும் அலக்ஷ்யமும் அவரையப்படி யொப்புக்கொள்ளத்தான் விட்டு விடுமோ? ஆதலால் தாமே புத்திக் கூர்மையில் மிகமிகச் சிறந்தவரென்றும் மற்றவருக்கு அத்திறமை அவ்வளவாக இல்லையென்றும் காட்டிக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் நெடுநாளாக மனோரதித்துக் கொண்டிருப்பதற்குத் தகுந்தபடி நடுவே அப்பியுபகமமென்கிற அரைகுறையானபடியொன்றை அமைத்துக்கொண்டார் போலும். ஆனால் அங்கு அதிகம் தங்குவதற்கு இடங்கொடாமல் ஸ்தாபகர்கள் மேற்கோள்களைக் காட்டி மேடைக்கு இழுக்கும்போது வேறு விதியில்லாமல் அவராகவே அங்கு சென்று ஸர்வதந்திரத்தைச் சார்ந்து விடுகின்றனர். அங்கும் தன்மதிப்பைத் தளர்த்திக்கொள்ள மனமில்லாமல் அக்கொள்கையும் தாம் செய்துவைத்த பழைய ஸித்தாந்தங்களே தானென்று சொல்லிவைத்து வெட்கத்தை மறைப்பதற்கு பொய்யாகவேனும் ஒரு ஸமாதானத்தைச் செய்து கொள்ளுகின்றார்போலும். இவ்விரிபொருளடங்கிய நியாய வாக்கியங்கள் சிலவற்றை இங்கு வரைந்து காட்டுகின்றோம்.



“அதிக்ருதப்ரமாணவிரோதாவஶ்யம் ப்ரக்ரியா ஜயம் । கதந்தே வாதேவாவராகார்யே கி: கிம் ஸ்ரீகார்யாஸ் கிம்வா பஹிஷ்கார்யா இதி கோ ஜாநாதி? அநர்த்தகல்பநாஸ் காரிண: தத்ர தத்ர தத்ரைவாஸ் ॥

அத கல்பிதா: ? ப்ராமாணிக இத்யப்யுபகமஸித்தாந்த: । ஸர்வதந்த்ரப்ரதிதந்த்ராப்யுபகமஸித்தாந்தபேதாத் । யச்சைதேநைவ வ்யவஹாரோ ... ஸர்வதந்த்ராப்யுபகம: ஸர்வதந்த்ரஸித்தாந்த: யதா ப்ரமாணாநாம் ப்ரமேயஸித்திரித்யாதி । அப்யுபகமதோऽபி ராயஸிகாதி ... ஸம்ஜ்ஞாத: ப்ரமாணப்ரமேயவ்யவஹார: । ஸ்வதந்த்ர ... ஸித்த: பரதந்த்ரே ... ப்ரதிதந்த்ரஸித்தாந்த: யதா வையாகரணஸ்ய ஸ்போட:, ஸௌகதஸ்ய க்ஷணபங்க:, திகம்பரஸ்ய ஸப்தபங்கீ, கௌமாரிலாநாம் ... ஶ்ரீயத்ர ... விஶேஷித ... ஸர்வஶரீராதி ... ஸித்தாந்தாநாமப்யுபகமப்ரஸித்திரேவ ப்ரதிதந்த்ரா: ... ஸித்தாந்தவாத ... அப்யுபகம ... தேஷாம் அப்யுபகமஸித்தாந்தத்வம் । ந ச ... ஹவந்தி நிபத:, ததாசைவ ப்ராயஶ: அநேகஸித்தாந்த பரிஶேஷ ப்ரஸங்க: । ந ச ... அப்யுபகமத்வம் இதி வாச்யம், ... ஸித்தாந்தாநாமிதி [ஶ்ரீந்யாய பரிஶுத்தி]

அபரீக்ஷிதாப்யுபகமாத் தத்விஶேஷபரீக்ஷணம் அப்யுபகமஸித்தாந்த: [ந்யா-ஸூ. அ. 1-ஆ-1 ஸூ-32]

யத்ர கிஞ்சிதர்த்தஜாதம் அப்யுபகம்யதே அஸ்து த்ரவ்யம் ஶப்த: ஸ து நித்யோऽத அநித்ய இதி த்ரவ்யஸ்ய ஸதோ நித்யதாऽநித்யதா வா தத்விஶேஷ: பரீக்ஷ்யதே ஸோऽப்யுபகமஸித்தாந்த: । ஸ்வபுத்த்யதிஶயசிக்யாபயிஷயா பரபுத்த்யவஜ்ஞாநாச்ச ப்ரவர்த்ததே இதி [ந்யாய தர்ஶந வாத்ஸ்யாயந பாஷ்யம்]

எனவே, தத்தத் தேச காலபேத புருஷபுத்தி வைசித்ரியாதிகளுக்கு அனுகுணமாக பிரமாணப் பிரமேய வியவஹார வியவஸ்தாபகங்களான ஸித்தாந்தங்கள் பலபடியாய்ப் பிரவிருத்தித்து அதிவிசாலமாய் வளர்ந்து விளங்குகின்றமையினல் புத்திமான்களெல்லோரும் அவ்வோ ஸித்தாந்தங்களுக்கு அன்யோன்யமுள்ள ஸாதர்மிய வைதர்மியங்களை ஸமர்மகமா யறிந்துகொள்ள வேண்டியது அத்யவச்யமாகின்றது.

இக்காரணம் பற்றி யாமிங்கு முதன் முதலில் சார்வாக மதத்தினேடு மற்றைய மதங்களுக்குள்ள ஸம்பந்தா ஸம்பந்தங்களை விசாரிப்போம். இவ்விச

ரணையினுட் புகுவதன்முன் இச்சார்வாக தர்சனத்தைப் பற்றிய உண்மைகள் சிலவற்றை விளக்கிவிட வேண்டியது அவச்யமாகின்றமையினால் அது விஷயமாக அவஸர ப்ராப்தமான ஒன்றிரண்டை இப்போது பிரகாசப் படுத்துகின்றோம். நம் தேசத்தில் ஒவ்வொரு மதத்திற்கும் அதனைப் பின்பற்றுகின்றவர்களான மனிதர் பலர் வகுப்பு வாரியாகப் பிறந்து காணலாம் படியிருக்கின்றனர். ஜைனம், பௌத்தம், இதுபோன்றதை எடுத்துக்கொண்டு பார்ப்போம். ஸமூஹ ஸந்ததிக் கிரமங்களை யனுஸரித்து அவற்றைத் தழுவி நடக்கின்ற பலரைக் காண்கின்றோம். அது கொண்டு அப் பரம்பரையினரை ஜைனர், பௌத்தர், என்று தனித்தனிப் பெயரையிட்டும் வியவஹரிக்கின்றோம். இப்படியே வைதீக மதங்களிலும் துவைதிகள், அத்வைதிகள், என்பதுபோன்ற விபாகங்களும் ஸமூஹம், ஸந்ததி பரம்பரை, இத்தியாதிகளின் கிரமத்தையே அனுஸரித்திருக்கின்றனவாகக் காணப்படுகின்றன. அதுபோல சார்வாக மதத்திற்கு அம்மதஸ்தர்களென்று சில ஸந்ததியார் தனியாக இருக்கின்றனரா? என்று பார்க்கப் புகுந்தால் அப்படி எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. ஜைனர், பௌத்தர், துவைதி, அத்வைதி, என்பதுபோல சார்வாகர், என்று வழங்கப்படுகின்ற வகுப்பு ஒன்றும் தேசத்திலெங்கும் காணக்கிடைக்கவில்லையன்றோ?

ஆகவே சார்வாகமென்பது யாதொரு ஸமூஹத்தினராலும் ஸந்ததிக்கிரமமாய் அநுஸரிக்கப் படுகின்றதொரு சாச்வதமான மதமல்லவென்று ஏற்படுகின்றது. எனவே எச்சந்ததியாரிடையிலும் இம்மதமானது தான் தலையெடுப்பதற்குத் தக்கதொரு தெசா விசேஷத்தைப் பெற்று விடுமானால் அப்போது அங்கு மேலோங்கி நிற்கும். அந்த தெசைமாறி விட்டாலோ ஆங்கிது உடனே மறைந்துபோகும். இது மேலோங்கி நிற்கையில் அவர்களை யாம் சார்வாகர் அல்லது நாஸ்திகர் என்று நினைக்கின்றோம். இது உள்ளடங்கி விட்டாலோ அவர்கள் பழையபடி தமது ஸந்ததிக்கிரம அனுஸாரமாக ஜைனராகவோ பௌத்தராகவோ துவைதியாகவோ அத்துவைதியாகவோ உள்ள பழைய நிலைக்கு வந்துவிடுகின்றனர். ஆகவே சார்வாகமென்பது ஏனைய சமயத்தினராலும் ஸமயத்தில்பற்றியே தீரவேண்டியதொரு ஸாமயிக தர்சனமென்றாயிற்று. இனி தந்தம் மதத்திலேயே விசேஷப் பற்றுள்ளவர்களான நானா மதஸ்தர்களின் இடையிலும் வாசியற இந்நாஸ்திக்கிய மொன்று மட்டும் தலையெடுத்து நிற்பதற்கான ஸந்தர்ப்பம் தானெது? என்று விசாரிக்கப் புகுந்தால் ஆங்கிந்த உண்மை புலப்படுகின்றது. அவ்வோ மதத்தினருக்குள் குறிப்பிட்ட சில தனி நபர்களுக்கோ அல்லது ஒரு ஸமூஹத்திற்கேயோ தந்தம் ஸமய முறைகளினால் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்ற அத்யாத்ம ஸௌக்கிய லாபத்தின்மீது அளவு கடந்த அபிலாஷை யுண்டாகி அவ்வவாவின் மிகுதியினால் அவர்கள் கிரமமாகப் பெறவேண்டிய பௌதிக ஸௌக்கிய லாபமெல்லாம் பாழாகப் போய்விடுமென்கிற நிலைமை ஏற்பட்டால் அதுவே அங்கு நாஸ்திக்யம் தலையெடுப்பதற்குத் தகுந்த ஸந்தர்ப்பமாகின்றது. இது நியாயம் தானே? ஐஹிக ஸுக லோபத்தால் ஆமுஷ்மிக மஹாலாபத்தைக் கெடுத்துக்கொள்ளலாகாதென்கிற வரைக்



கும் யுக்தந்தானென்றாலும், அவ்வாமுஷ்மிக மொன்றையே குரங்குப்பிடியாக நினைத்துக்கொண்டு ஐஹிக க்ஷேமங்களை யெல்லாம் நாசமாக்கி விடுவது நீதியல்லவே? கேட்டிற்கு இடமாகாத அளவிற்கு ஐஹிக ஸுகங்களை அனுபவிப்பது பாதகமாக மாட்டாது. என்பதோடு பரஸுகத்தைப் பெறுவதற்கும் இஹத்திலுள்ளவைகளான அர்த்த லாபாதிகள் பல பல்வகையிலும் உதவுமன்றோ? ஆனதினாற்றான் நீதி நிபுணர்கள் யாவனொருவன் பரலோகத்திய ஸுகலாபத்திற்கு முரண்படாத வகையில் இவ்விடத்திய இன்பங்களையும் நுகர்கின்றானோ, அவனல்லவோ புத்திமானும் ஸுகியுமாவான். ஸ கலு ஸுதீ: ஸுகீ வா யோऽமுத்ர ஸுகாவிரோதேந ஸுகமநுபவதி [ஸோமதேவ ஸூரி] என்கின்றார்கள். இவ்வளவுமட்டுமல்ல அர்த்தகாமங்களை அனாதரித்து தர்மத்தையே கோரிப் பாடுபடுகின்றவரை அறுவடைக்குச் சித்தமாக விளைந்து பழுத்துப் படுத்துக்கிடக்கின்ற செந்நெற் கதிர்நிறைந்த நற்கழனியை பட்டிமேய விட்டுவைத்து, கிளர் திடலைக் கிண்டிக் கொண்டிருக்கின்றவரோடு ஒப்பிட்டுப் பரிஹஸித்துமிருக்கின்றனர். ய: காமார்த்தாவுபஹத்ய தர்மமேவோபாஸ்தே ஸ: பக்வம் க்ஷேத்ரம் பரித்யஜ்ய அரண்யம் க்ருஷதி [ஸோமதேவ ஸூரி] முமுக்ஷுக்கள் தானென்றாலும் அவர்களுக்கும் யோகத்திற்கு ஸாதனமாயிருக்கின்ற சரீரத்தின் இரக்ஷணார்த்தமாக ஆயுர்வேதம்போன்ற நீதிசாஸ்திரமும் சுருதி ஸ்மிருதியாதிகளுக்கு விரோதமில்லாத வகையில் அனுஸரிக்கப் படவேண்டியதேதான். இவ்வர்த்தத்தை,

தத்ர லௌகிக ஹிதாஹிதயோ: ஸ்வய வ்ருத்திரேகாக்ஷ்ய ப்ரவ்ருத்தி நீதி சாஸ்த்ராதிகம் ப்ரமாணம், ததபி யோகஸாதநீபூத சரீர ரக்ஷணாத்யுபயோகி ச்ருதி ஸ்ம்ருத்யவிரோதேந அநுஸரணீயம் [ந்யாயபரிசுத்தி]

என்று ஸ்ரீமத் தேசிகனும் விசதமாக்கினர்.

மஹாகவி, பாணனுடைய பரிசுத்தியைப்பற்றி பிசுனர்களுடைய கோழுரையினால் மனங்கலங்கியிருந்த ஸ்ரீ ஹர்ஷராஜன் நண்பர் சிலர் அவனைத் தனது ஸபைக்கு அழைத்துக்கொண்டு வந்தபொழுது முதன் முதலாக அக் கவிச்ரேஷ்டரைக் கண்டவுடனேயே வெகு நாளாகத் தனது மனத்தினிடை பதிந்து கிடந்த அபிப்பிராயத்திற்கேற்க அப்பரிசுத்த புருஷனையும் ஒரு தூர்த்தனைப்போலெண்ணி அவமதித்தாரன்றோ? அதற்கு அந்த தீரரான மேதாவி யாது செய்தார்?

ஆயுஷ்மந்! உபயலோகாவிரோதிநா ஸ்வல்பேந ஆவஹேந ஸபலீ-க்ருதம் க்ருதம் ப்ராதமிகம் வய: ।

ஆயுஷ்மானே! இஹபரமிரண்டிற்கும் முரண்படாத ஏதோ சிறிதளவேயான மன்மத சாபல்யத்தினால் எனது யௌவனப் பருவத்தைப் பாழாக்காமல் இருந்திருப்பேனேயன்றிப் பிறிதொன்றுமில்லை என்றார். இதனால் தர்ம அவிருத்த

மாக காமத்தை அங்கீகரிப்பதில் தவறொன்றுமில்லை யென்பதோடு அதர்ம மென்கிற பிராந்தியினால் அதனைத் தள்ளிவிடுவது தகாததென்றுஞ் சொல்லிய தாயிற்றன்றோ? காமத்திற்குள்ள இந்த நியாயமானது அர்த்தத்திற்கும் ஸமானமேதான்.

ஸாதாரணமாக உலகத்தார் அர்த்தம், என்பதற்கு பொன் வெள்ளிகளாலாகிய ரூபாய் மோகரா வகையராக்களே யென்றும் காமம், என்பதற்கு ஸ்திரீ புருஷர்கள் ஒன்று கூடிக்குலாவுவதினா லுண்டாகின்ற இன்பமே யென்றுந் தான் பொருள் படுத்திக் கொள்கின்றனர் என்றாலும் நீதிநிபுணர் நினைத்திருப்பது அவ்வளவு மட்டுமல்ல. மற்றென்னவெனில்? மாந்தர்கள் தம் இந்திரிய வாயிலாக அனுபவிக்கின்ற இன்பங்கள் யாவற்றுமே காமமென்றும் அவ்வின்பத்திற்கு நேராகவோ அல்லது ஏதேனுமொரு பொருளின் வாயிலாகவோ காரணமாயிருக்கின்ற பதார்த்தங்கள் யாவற்றுமே அர்த்த வகுப்பிற் சேர்ந்ததென்றும் நிர்ணயித்திருக்கின்றனர்.

சூஹிஶாநிக ரஸாந்தாவிஷாஸவெஷ்ரீப ஷீதியத: ஸ காம: । யதஸ-வஷ்வுயொஜநவிஷிஷெஷாாயதூ: [ஸொமைதெவஸூரீ]

எனவே, வஸிஷ்டருடைய காமதேனுவைத் தொடர்ந்து சென்று பகற்பொழுதை முழுவதும் கானகத்திற் கழித்துத் திரும்பி வருகின்ற தன் நாயகனை பசித்துக்கிடந்த இருகண்களினாலும் ஸுதக்ஷிணாதேவி வாரிப்பருகியதும், ரகு மஹாராஜன் தனது அருமைப் புதல்வனை திலீபனை மடியின்மீது ஏற்றிவைத்து அணைத்துக்கொண்டு தன்னுடம்பை அமுத நீரால் நனைப்பது போன்றிருக்கின்ற அவ்வாலிங்கன ஸுகத்தில் ஆழ்ந்து கிடந்ததும், தனது அருமைக்குமாரனை ராமச்சந்திரன் வீதியில் பவனிவரும்போது பூர்ணசந்திரன் போன்ற அவன் திருமுக மண்டலத்தைக்கண்டு அதன் ஸௌந்தர்ய ஸாரத்தை அருந்திக்கொண்டே யிருக்கையிலும் சக்கிரவர்த்தி திருப்தி பெறாமல் விடாய்ப்பட்டு நின்றதும் இன்னும், இவைபோன்றவைகளெல்லாம் ஒவ்வொரு காமவகையின் விசேஷங்கள் தான்.

வஸிஷ்டயெநாஸ நுயாயிநம் தஂசூவதஷாநஂ வநிதா வநாஜாக। வவெளநிசெஷாயூஸவக்ஷவஷி: உவொஷிதாஹூாவிவயொஅநாஹூாஂ ॥
தகஷாஶரொவத்ரு ஶரீரயொமஜெ: ஸுவெநஷ்ஷிஞஜவிவாஶரதஂ ஸுதி [ரவுவஂஶஂ]

அநுகாஜாநநஂ ஶாஶஂ சுதீவ வியதூஶநஂ ।
ரூவௌஷாயஷ மஹெணெ: வுஂஸாஂ தூஷிதாவஹாரிணஂ ॥
வஶஷாஹிதவா: வஜஷநூஂ ஹூாதூயஜிவ ஜா: ।
நததவஷஸாயாஜஂ வஶஶாநொநராயிவ: [ஸ்ரீமத்ராமாயணம்]

எனவே, அன்று பிறந்த சிசு ஒன்று தாய்ப்பால் குடிப்பதற்கு துவரிப்பதுகூட விலக்ஷணமான ஒருவிதக் காமப் பிரவிருத்தியேதான், என்று தற்



காலத்தில் மேனாட்டு மேதாவிகள் சிலர் ஸாதிக்கத் தலைப்பட்டிருப்பதற்குக் கூட இக்காமவிளக்கக் சூத்திரத்தின் தாத்பரியத்திலேதான் நோக்கமென்றால் அதுவே மிக்கப் பொருத்தமுள்ளதாகும். எனவே, நியாயமான காமங்களை புத்திமான்கள் அசட்டை செய்யலாகாதென்பதோடு அர்த்தமென்பது காமத்திற்கு மாத்திரமன்றி தர்மத்திற்குங்கூட காரணமா யிருப்பதால் காமிகள் மாத்திரமன்றி தர்மாபிலாஷை யுள்ளவர்கள் கூட அதனை அநாதரிக்கலாகாதென்றதாயிற்று [ஶ்ரஷகாமயொ: ஸுஷமுஜகாஜு—வொ.ஸூ]

(இன்னும் தொடரும்.)

---

# அத்யவஸாயத்தின் பெருமை.

---

[சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

(சென்ற ஸஞ்சிகை தொடர்ச்சி.)

அக்னிபுருஷன் ஸப்தரிஷிபத்னிகளிடம் காதல் கொண்டு அவர்களை அடையமுடியாமல் தன் பத்தினியாகிய ஸ்வாஹா தேவியையும் மறந்துதிரிந்தனன். ஸ்வாஹாதேவி இவன் கருத்தறிந்து அந்த ரிஷிபத்தினிகளுடைய ஒவ்வொருத்தியின் உருவத்தை ஒவ்வொரு நாளுந் தரித்துக்கொண்டு தன் கணவனை மகிழ்வித்துக் கொண்டிருந்தாள். இப்படியிருக்கிற நாளில் ஸ்வாஹாதேவி அருந்ததியின் உருவத்தை எடுக்கநினைத்து முடியாமல் அகன்றனள். இப்படி முடியாமைக்குக்காரணம் அருந்ததியின் பாதிவ்ருத்யத்தின் ஊற்றமேயாம். மற்ற ரிஷிபத்தினிகட்கு இது விஷயம் தெரியாதிருக்கவும், இவர்களுடைய ரூபக்ரஹணத்தை அவள் செய்ததே காரணமாக இவர்களுக்குப் பாதிவ்ருத்தியக் குறைவுண்டானதாகக்கருதி இவர்களை விலக்கிவிட்டார்கள். இவர்கள் மறுபடியும் அருந்தவமிருந்து நக்ஷத்ரமண்டலத்தில் கிருத்திகா நக்ஷத்ரமாக விளங்குகிறார்கள்.

ஸப்தரிஷி மண்டலத்தில் வஸிஷ்டர் பக்கத்தில் அருந்ததி கண்ணிற்குப் புலப்பட்டும் புலப்படாமலிருப்பதையும், மற்றவர்கள் பத்னியில்லாமல் தனிமையாக இருப்பதையும் காணலாம். அருந்ததி தெளிவாக விளங்காது கண்ணுக்குப் புலப்பட்டும் புலப்படாமலுமிருப்பதற்கு ஸ்வாஹாதேவி இவளுடைய ரூபத்தைக்கொள்ளவேண்டுமென்று நினைக்க, அவளது நினைவிற்கு விஷயமா யிருந்ததேகாரணமாகும். இதனால் ஸ்வாஹா தேவியின் நினைவிற்கு விஷயமாயிருந்ததும் அருந்ததியின் பாதிவ்ருத்யத்திற்குக் குறைவென்பது விளங்கும்.

இச்சரித்திரத்தை ஆராயும்போது தமயந்தி மறு ஸ்வயம்வரம் நடத்தியது தன்னாயகனை யடைதற்காகச்செய்த சூழ்ச்சியாகவிருந்தாலும், மறு ஸ்வயம்வரம் வரிக்கப்போகிறாள் என்று இவளே சொன்னது குறையேயாம். சாவித்திரியின்நிலைமையை நோக்கியது தமயந்தியைப்போலில்லை. பாதிவ்ருத்யத்தில் அத்யவஸாயம் உறைத்திருக்கவேண்டாதபடி விரோதம் ப்ரபலம். நாட்டிலுள்ளார்போல நமக்கு வாழ்வுண்டென்கிற நினைவுங்கூட ஒழிந்தது. இவள் விவாஹம் தொடங்கி பதியொருமாதமே பதியின் ஜீவதசையென்று தெரிந்து கொண்டாளாதலால் நாள் நெருங்க நெருங்க வயிறுபதைக்கும். கணவனு

டைய ஆயுளின் வரையறை தெரியாதிருந்தாலும், இருந்துவாழும் நாளிலாவது கவலையற் றிருக்கலாம். அதுவுமில்லை. இவள், அரசன் அருந்தவமிருந்து அருமையாகப் பெற்ற செல்வமகள். விவாஹ முடிந்ததும், ஆடையாபரணங்களைக் களைந்தெறிந்து காஷாயமுடுத்திக் காய் கிழங்கு கொண்டுவரக் கூடையுங் கையுமாகப் புலப்படவேண் டியவளானாள். அருந்தவத்தாற் பெற்று அருமையாக வளர்த்த அரசன் யாரிடத்துங் கண்டிராத குணவிசேஷங்கள் அமையப்பெற்ற இப்பெண்ணுக்கு நேர்ந்தநிலைமையைக் குறித்து இவன் அடைந்த மனக்கலக்கத்தை வாய்கொண்டு சொல்லவொண்ணுமோ!

நிற்க, ஸ்திரீகளுக்குப் பிதாவின் அநுமதியில்லையாகில் ஸ்வயம்வரம் நடத்த லாகாது. ஸாவித்திரியின் தகப்பன் ஸாவித்திரியை அனுப்பும்போது 'நீ குறிப்பிட்ட புருஷனை என்னிடம் வந்து சொல்; நான் ஆலோசித்து விவாஹத்தை முடிக்கிறேன் என்று சொல்லியிருந்தானாதலால் இவள் நினைப்பிட்ட புருஷன் அவனுடைய அனு மதிக்குப் பிறகே இவளுக்குப் பதியாவதற்குரியன். அப்படியிருக்க இவள் தகப்பன் எல்லாம் செய்யச் சக்தரான நாரதரின் அனுமதிகொண்டு ஸாவித்திரியை நோவும் ஸத்தியவானை விட்டு வேறு புருஷனை வரிப்பாய்' என்று வற்புறுத்தியவிடத்தும் இவள் சிறிதும் கலங்காது அவனையே நாயகனென்று உறதிகொண்டது மிகக்கி அருமை. ஆதலால் இவளுடைய அத்யவஸாயம் மிகவும் உயர்ந்த தாகும். இவளுக் கேற்பட்ட பெருமையினும் சிறந்ததே.

தமயந்தி, தன்னுடைய சபதத்தினால் இந்திராதிகளை உருக்காட்ட மயக்கினாள். ஸாவித்திரி ஒரு பிரதிஜ்ஞையும் செய்யாதிருக்கவே இவளது கண்ணிற்கு யமன் தோற்றினான். உயிரை வாங்க வந்தவன் இவள் கண்ணிற்குப் புலப்பட நியாய மில்லை. கண்ணிற்குப் புலப்பட்டு உடனே மறைந்தானென்பதுமில்லை. இவள் பின்தொடர்ந்துவர ஆகாயமார்க்கமாய் விரைவிற் செல்லவேண்டியவன். அது செய்ய முடியாமல் இவள் நடையை அநுசரித்து வார்த்தையாடிக்கொண்டுச் சென்றான். இது யாருக்கு நேர்ந்திருக்கிறது! கூடச்சென்று வார்த்தையாடியமுறையில் திருப்தி யடைந்த யமன் இவள் வேண்டிய வரங்களையுங் கொடுத்தான். ஆகையால் ஸாவித் திரிக்கு ஏற்பட்ட பெருமை மேலானது. யமன் இவளுக்கு நூறுபிள்ளைகளுண்டாகும் படி வரமளித்த பின்னரும், ஸத்தியவானை விடாமைக்குக்காரணம் இதுவாகும். அது வருமாறு :—

ஸௌதாஸ பத்தினியான மதயந்தீ ஸௌதாஸனுக்குப் புத்தி ரோத்பத்திக்குப் பிரதிபந்தகமான ரிஷிசாபம் ஏற்பட்டிருந்தது காரணமாகக் குலகுருவான வஸிஷ் டரைக்கொண்டு புத்திரனையுண்டாக்கிக் கொண்டதுபோல நானுமுண்டாக்கிக் கொள்ளலா மென்னும் கருத்துடையவனாய்ச் செல்கின்றான்; ஆபத்தர்மம் நமக்குத் தேவையில்லை, என்று வெறுத்து, யமனை நோக்கி முக்ய தர்மத்தை யநுஷ்டிக்கும்படியன்றோ பெரி யோர் உபதேசிப்பர். வேறு வழியில்லாத ஆபத்தசையில் கௌண தர்மத்தை அநுஷ்டிக்கும்படி அநுமதி செய்வார்கள். நான் முக்யதர்மத்தை அநுஷ்டிக்கும்படி செய்வது உம்முடைய அதீனமாயிருக்க எனக்கு ஆபத் தர்மத்தை எப்படி விதிக்க நினைத்தீர்! என்று வினவ அவனும் பதிலுரைக்க மயங்கி ஸத்தியவானையும் விட்டுப் போனான். ஸத்யவான் உயிரைக் காலந்தப்பாது வாங்கவந்த யமன் வரன்கேட்கச் சொன்னபோது ஸத்யவானைத்தவிர கேட்பாய் என்று இவனை விலக்கிக் கொண்டவன் கடைசி வரத்தில் ஏமாந்து போனான். இப்படி ஒரு அதிகாரத்திலிருக்குமவன்,



அதைத்தவறாது நடத்திப்போகிறவன் மயங்கினனென்றபோது இவள் பெருமை மேலானதன்றோ!

இனி, ஏகபத்தினியைப் பற்றி விசாரிப்போம். ஒரு ப்ராஹ்மண ப்ரஹ்மசாரி அநுஷ்டானார்த்தமாக ஒரு குளக்கரையில் தங்கியபோது மரத்திலிருந்த ஒரு கொக்கு இவன் தலையில் எச்சமிட்டது. இவன் கோபித்து அண்ணாந்து பார்த்தான்; உடனே அந்தக்கொக்கு சாம்பலாய் எரிந்து விழுந்தது. இதனைக்கண்ட ப்ரஹ்மசாரி 'தவநிலை யின் பலம் கைபுகுந்தது' என்கிற இறுமாப்புடன் நாட்டையடைந்து பிக்ஷாடநம் செய்துகொண்டிருந்தான். ஒருநாள் பாதி விருத்யத்தில் ஊற்றமுண்டானதுவே காரணமாக ஏகபத்னீ என்றே பெயர் வழங்கப்பட்ட ஒரு ப்ராஹ்மண பத்னீயிடத்திற் சென்று பிக்ஷை கேட்டான். அவளும் பிக்ஷையிடுவதாக இருக்கச் சொல்லி விட்டு உள்ளேபுகுந்தாள். அங்குத் தன்னுடைய பர்த்தா சிரமத்துடனிருக்கக்கண்டு இவனை மறந்து பணிவிடையில் அமர்ந்தாள். ப்ரஹ்மசாரி வாசலில் இருந்தான். பிக்ஷைக்கு செல்கின்றவர்கள் 'பவதி பிக்ஷாந்தேஹி' என்கிற வார்த்தை உள்ளிருக்கிறவர்கள் காதிற் பட்டுவருகிற அவகாசத்தளவே நிற்கலாம். கதவின் இடுக்கு வழியாகப் பார்க்கலாகாது. ஆதலால் இருக்கும்படிசொன்னால் போகலாகாது ஆதலால் இந்த பிரம்மாரிசாயும் வாச லிலே நெடுநேரம் தங்கியிருக்கும்படி நேர்ந்தது. சினங்கொண்டான். அப்பொழுது பதியின் பணிவிடையால் இவனை மறந்திருந்த ஏகபத்னீயாவள் இவன் நினைவுக்குவந்த வுடன் 'அந்தோ! என்னகார்யஞ்செய்தோம்' என்று தன்னை நொந்து கொண்டு பிக்ஷையுடன் வரக்கண்டான். இவன் உறுத்து நோக்கினான்; கோபக்குறிகாட்டினான். அவள் சிரித்து என்னை நீர் கொக்கா நினைத்தீர் போலும்! உமக்கு இன்னும் தர்ம நிர் ணயம் பிறந்ததில்லை; உமக்குத்தெரிந்து கொள்ளவேண்டிய முறைபலவுண்டு; அவற் றைத் தர்மவ்யாதனிடம் சென்று தெளிந்துகொள்வீர்; என்று சொல்லி "பதி பஶ்ரூஷயாஸெ ஏா யஸ்ஸெரொசதெ த்விஜா" "பதிசிச்ரூஷயா தர்ம்மோ யஸ்ஸமேரோசதே த்விஜா" என்று தன்னுடைய நிஷ்டையையுமுரைத்து அனுப்பினாள். இதுவே இவள் விஷயமான சரித்திரம்.

RBS ௱211, ௲11௰ 1113.21.1

இதனால் இவளுடைய நிஷ்டை எத்தன்மையுடையது? இவளுக்கேற்பட்ட பெருமை எவ்வளவென்று ஆராயவேண்டும். இந்த ஏகபத்னீ பிரஹ்மசாரி பிராம் மணனை நோக்கி 'என்னை கொக்கா நினைத்தீர் போலும்' என்று சொன்னது வியக்கத் தக்கது. காட்டில் தனியிடத்தில் நடந்ததை உள்ளபடி உரைத்தாள். பிரஹ்மசாரியும் கேட்டு வியப்படைந்தான். இப்படிக் கண்ணுக்கெட்டாத விஷயத்தை அறிந்து சொல்லும் இயல்பு ஸாவித்திரி முதலானோர்களிடத்திலுமில்லை. அவர்களிற்காட்டில் இவளுக்கிது அதிசயத்தை விளைப்பதாகும். அப்படிப்பட்ட அதிசயம், மற்றவர் களிடத்தில் இல்லாதது இளிவடத்தில் மாத்திரம் உண்டாயிற்றென்று சொல்லவில்லை. ஆனால் இவள் பிராம்மணனை நோக்கிச் சொன்னபோது "பதிசிச்ரூஷயா தர்ம: யஸ்ஸ மேரோசதே த்விஜ" என்று சொல்லியிருக்கிறாள். அஃதாவது பதிசிச்ரூஷையில் ஏற் படற்கூடிய தர்மம் எனக்கு ருசிக்கிறதென்று சொல்லியிருக்கிறாள். பதிவ்விருதைகளா யிருப்பார் எவருக்கும் இது உரியதேயாம். இவளுக்கு மாத்திரமுள்ளதாக அதீந்த்ரிய விஷயஜ்ஞானத்தைச் சொல்லியிருக்க அதுக்குறுப்பாக மற்றொருவரிடமில்லாத ஒரு அநுஷ்டான விசேஷமிருப்பதாகச் சொல்லவேண்டும்.

மேலும், பர்த்தாவினுடைய பணிவிடையில் ஏற்படக்கூடிய [illegible]



18801

என்று சொல்லும்போது மற்ற தர்மங்கள் இவளுக்கு ருசிக்கவில்லையென்று ஏற்படுகிறது. ருசிக்காத தர்மங்களை அநுஷ்டிப்பதாகச் சொல்லமுடியாது. பிராம்மணனுக்குப் பிச்சையிடுவதாச் சொல்லியிருக்க வேண்டியதில்லை. அவனும் இவள் இப்படிச் சொன்னபோது 'உனக்கு ருசிக்காதிருக்க எனக்குப் பிக்ஷையிடுவதாகச் சொல்லுவதென்' என்று கேட்கவும் கூடும். ஆக, இவைகளை நோக்கும்போது ஒருமுறைக்கும் விரோதமில்லாததாய் இவளுக்குமாத்திரம் உண்டானதாய் இந்த சுலோகத்திற்குப் பொருள் சொன்னால் பொருத்தமாயிருக்கும். இருப்பதைக்கொண்டே பொருத்தமாக உரைக்க வேண்டியதவசியம். ஆகையால் பர்த்தாவின் பணிவிடையால் ஏற்படக்கூடிய தர்மமே. எனக்கு ருசிக்கிறதென்கிற அர்த்தத்தைவிட்டு, ‘‘ய: யஉஃ: ஸ: வதிபரு ஶ்ருஷயா ஸெரொஅதெ” ” என்று அந்வயங்கொண்டு பதியின் பணிவிடைக்குப் பலத்வமும், பலத்துக்கு ஹேதுத்வம் சொல்ல திருநீயைகொண்டு ‘‘வதி பரு ஶ்ருஷாரவ ஸமுஹெத-நா ஸெரொஅதெ” என்று கொள்ள வேண்டும். அர்த்த பலத்வாத் ‘‘ய: ஸ: என்று வீப்ஸை புகும். அப்பொழுது எவை தர்மமாக வியவஹரிக்கப் படுகின்றனவோ அவை பதிசிச்ருஷாரூப பலத்தைக் கொடுப்பது காரணமாக எனக்கு ருசிக்கிறது என்று சொன்னபடியாகிறது. அப்போது அவள் கருத்து வேறாகும். அலௌகிக ச்ரேயஸ்ஸாதநம் தர்மமாகும். அஃதாவது கண்ணிற்குப் புலப்படாமலிருந்து நம்முடைய நன்மைக்கு காரணமாவது எதுவோ அதுவே தர்மமாகுமென்பதாம். அந்த நன்மை இந்த லோகத்தில் உண்டானாலும் பரலோகத்திலுண்டானாலும் அதிலொருவாசியுமில்லை.

உலகத்தார் தர்மங்களை அநுஷ்டிப்பதெல்லாம் இஹபரங்களில் தாமடைய வேண்டிய நன்மையை நாடியேயாம்; நான் அப்படிச் செய்வதில்லை; என்னை ஒரு பொருளாக நினைத்து எனக்கு ஒரு நன்மை வேண்டும் என்று கருதி நான் தர்மத்தை தில்லை; எந்தத் தர்மத்தைச் செய்தேனாயினும் அது என்னுடைய நாயகனுக்கு முகமலர்ச்சி யுண்டாகுமென்று கருதியே நான் செய்வதாகும். அப்படி யாகும்போது உமக்குப் பிக்ஷையிடுவதும் பர்த்தாவின் முகோல்லாஸார்த்தமாகவே. ஆகவே நான் உட்புகுந்த போது பர்த்தாவை சிரமத்துடனிருக்கக் கண்ட எனக்கு முந்தி அவர் சிரமந் தீர உபசரிப்பது அதிலும் முக்யமாம். உமக்குத் திருப்தி செய்து அதின் வழியாகப் பர்த்தாவுக்குத் திருப்தியுண்டாக்கு வதைக்காட்டிலும் நேராக அவருக்குச் சிரமத்தைத் தீர்த்து திருப்தி யுண்டாக்குவது உயர்ந்ததாகும். ஆகையால் நான் உம்மை மறந்தது குற்றமாகாது; என்கிற கருத்தாம்.

இதன் கருத்தாற் கிடைப்பது இதுவாகும். அஃதாவது ஸத்வாரமாகப் பர்த்தாவை திருப்தி செய்வதைக் காட்டிலும், அத்வாரகமாகத் திருப்தி செய்வது உயர்ந்ததாகுமென்பதாம். இப்படி ஒருவனுக்கு அநந்யார்ஹசேஷ பூதையா யிருக்குமவள் ஸ்வாநுஷ்டாநத்துக்கு அவனுடைய முகோல்லாஸத்தையே பலமாகக் கொண்டாலும் அதிலும் ஸத்வாரகமாகச் செய்யும் பணிவிடையைக்காட்டிலும் அத்வாரமாகச் செய்யும் பணிவிடையை விசேஷமாகக் கொண்டதும் இவள் அநுஷ்டானத்திற்கு விசேஷமாகும். அதனால் இவளடைந்த பெருமையும் சிறந்ததாகும். ஏகபத்னீ என்றே இவள் பாதிவ்ருத்யத்தின் பெருமை தோற்ற வ்யவஹாரமும், அதீந்திரிய ஜ்ஞாநமும் இவளுக்கே யுள்ளனவாகும்.

இதனால் எம்பெருமானுக்கு அநந்யார்ஹ சேஷபூதர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள்



அநுஷ்டிக்குந் தர்மங்களுக்கு இது ஒரு நிதர்சனமாகும். சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட தர்மங்களைப் பகவதாரா தனமென்றே அநுஷ்டிப்பதும், அதிலும் ஸத்வாரக ஆராதனத்திலும் அத்வாரக ஆராதனம் உயர்ந்ததெனக் கொள்வதும் ஸத்ஸம்ப்ரதாய வித்தமாகும். பெரியோர் ஸந்தியாவந்தனாதி கர்மங்களில் அக்நீந்ராதி சப்தங்களை ததந்தர்யாமியான பரமாத்மா பர்யந்தம் அநுஸந்தித்து அநுஷ்டிப்பர்கள். ஆகையால் அவர்கள் அநுஷ்டானம் பகவதாராதனமே யாகும். ஆனாலும் அக்நீந்திராதியரின் வழியாக எம்பெருமானை ஆராதிப்பதாக விருப்பதால் இது ஸத்வார காராதனமாகும். கோயில்களில் அர்ச்சாரூபேண எம்பெருமானுடைய கைங்கர்யம் ஸாக்ஷாதாராதநமாகும். அஃதாவது அத்வார காராதநயாகும். அத்வாரகம், ஸத்வாரகம் என்ற இரண்டினுள் அத்வாரகாராதநம் சிறந்ததாகையால் எம்பெருமானுடைய புறப்பாட்டில் அநுயாத்ராதி கைங்கர்யங்களைச் செய்து போருமவர்கள், ஸந்தியாவந்தனாதி காலம்வரில் அதைப்ரதான மாகக் கொள்ளாதே இந்தக் கைங்கர்யங்களை முடித்துக்கொண்டு ஸந்தியாவந்தனாதிகளில் அந்வயிப்பது ஸம்ப்ரதாய வித்தமாக விருக்கிறது.

ஒரு நாள் உபந்யாஸம், ஸந்தியாகாலாதிக்ரமணத்தைச் செய்ய, பட்டர் 'இன்று காலாதிக்ரமணத்திற்காக நமனுக்கு நாம் பயப்பட வேண்டியதில்லை' என்று அருளிச்செய்தார். இதுவும் இங்கு ஆராயத் தக்கது. சிலர் ஸந்தியாவந்தனாதி கர்மங்களை ஆஜ்ஞா கைங்கர்யங்களாகும். (அஃதாவது செய்யாவிடில் அநர்த்தத்தை விளைக்கும் கைங்கர்யங்களென்பதாம்.) ஆக அநுஜ்ஞா கைங்கர்யங்களான அநுயாத்திராதிகளைக் காட்டிலும், ஆஜ்ஞா கைங்கர்யங்களான ஸந்தியாவந்தனாதிகள் ப்ரதானமாகும்.. ஆகையால் ஸந்தியா வந்தனாதிகட்கு விரோதமின்றி அநுயாத்திராதிகளை அநுஷ்டிக்கவேண்டுமென்பர்கள். அஃதாவது அநுயாத்திராதிகளில் அந்வயித்தவர்கள் ஸந்தியா வந்தன காலம்வரில் கைங்கர்யத்தை நிறுத்தி இதை முடித்துக்கொண்டு மறுபடியும் அதில் அந்வயிக்கவேண்டுமென்பர்கள். அப்படியாகில் ஸந்தியாகாலத்துக்கு முந்தியே கைங்கர்யத்தில் அந்வயித்துப்போருமவர்கள், நடுவில் பெருமாள் எழுந்தருள ஸந்தியா காலம் வரக் கண்டால் உடனே பெருமாளை அங்கேயே நிறுத்தி விட்டுத் திருவெண்கொற்றக் குடை, திருவெண்சாமரம் இவைகள் பரிமாறுவாரும், பக்ஷிராஜன் பரிகரத்தாரும் செல்லவேண்டிவரும்.

மேலும், அநுயாத்திராதிகளை அநுஜ்ஞாகைங்கர்யங்களாகவும் சொல்லலாகாது. ஸந்தியாவந்தனாதிகள் ஸ்ரீ வைஷ்ணவரல்லாத வர்ணதர்மிகளுக்கும் உரியதாதலால் ஸாதாரண ஆஜ்ஞாகைங்கர்யங்களாகும். அநுயாத்திராதிகள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கே உரியதாகையால் அஸாதாரண கைங்கர்யங்களாகும். ஆக, ஸாதாரண ஆஜ்ஞா கைங்கர்யங்களைக்காட்டிலும், அஸாதாரண ஆஜ்ஞா கைங்கர்யங்களே அவசியமாகையால் (ஸந்தியாவந்தனாதிகளைக் காட்டிலும் அஸாதாரண ஆஜ்ஞா கைங்கர்யங்களே அவசியமாகையால்) ஸந்தியாவந்தனாதிகளைக் காட்டிலும் அநுயாத்திராதி கைங்கர்யங்களே ப்ரதானங்களாகும். இதை, ‘‘அத்தாணிச்சேவகத்தில் பொதுவானது நழுவும்’’ என்று பெரியார்கள் காட்டினார்கள்.

இப்படி ஸத்ஸம்ப்ரதாயவித்தமான அநுஷ்டான விசேஷம், ஏகபத்னியினுடைய விசேஷத்திலும் நேர்பெற்றது ஆராயத்தக்கது. இப்படி ஸதாசாரவித்தமான அநுஷ்டானத்தைக் கைக்கொண்டது ஏகபத்னிக்கு மற்றவர்களிலும் விசேஷமாகும். அதனால் மற்றவர்கள் அதிசயத்திலும் இவளுடைய அதிசயம் விஞ்சியதாகும். மற்றவர்களுடைய தர்மாநுஷ்டானமும், பர்த்தாவின் பணிவிடையும் பரலோகஸாதகமென்கிற கருத்துடனே அநுஷ்டிக்கப்பட்டதாகும்.

# ஸ்ரீ பாஷ்யகாரரின் பெருமை.

[ஸ்ரீ உப. டி. ராமஸ்வாமி அய்யங்கார், பி.ஏ., பி.எல்.]

---

ஜயதி ஸகல வித்யா வாஹிநீ ஜந்மஶைல:
ஜநிபத பரிவ்ருத்த ஸ்ராந்தி விஸ்ராந்தி ஶாகீ ।
நிகில குமதி மாயா ஶர்வரீ பாலஸூர்ய:
நிகமஜலதிவேலா பூர்ணசந்த்ரோ யதீந்த்ர: ॥

"இயலும் பொருளும் இசையத் தொடுத்து ஈன்கவிகளன்பால்
மயல்கொண்டு வாழ்த்து மிராமானுசனை மதியின்மையால்
பயிலும் கவிகளில் பத்தியில்லாத என்பாவி நெஞ்சால்
முயல்கின்றனன் அவன் தன் பெருங்கீர்த்தி மொழிந்திடவே.

ஓதிய வேதத்தினுட்பொருளாய் அதனுச்சி மிக்க சோதியாகிய ஸ்ரீய:பதியை நாதனென வறியாதுழல்கின்ற தொண்டர், தம் பேதமை யென்னும் பேரிருள் நீங்க, "அருமுனிவர் தொழுந்தவத்தோன் எம்பி ராமானுசன்" என்னும் தொல்புகழ் சுடர் உதித்து உலகெங்கும் தன் பேரருட் கதிர் பரப்பி இன்று தானும் சற்றுங் குன்றாவொளியுடன் ப்ரகாசித்து வருகிறார். அவ்வாறு திகழும் ஒளியில் ஒதுங்கி வளரும் பாக்கியம் அடைந்தோர் ஸ்ரீ வைஷ்ணவர்களாகிய நாமெல்லோரும். இந்த பாக்கியத்தை நம்மனைவருக்கும் நல்கிய அம்மஹானுடைய உதாரகுணங்களையும் உயர்ந்த சரித்திர விசேஷங்களையும் எத்தனையோ இடங்களில் எத்தனையோ விதங்களாக நமது பூர்வாசாரியர்கள் பரக்கப் புகழ்ந்து பேசியுள்ளார்கள். இருப்பினும் வரம்பி லாரியேத்திலும் வரம்பிலாத கீர்த்தியாகையால் ஸ்ரீபாஷ்யகாரரின் பெருமை இன்னும் அளவிறந்ததாகவே காணப்படுகிறது. மலைகளைப் புரட்டி வீழ்த்தி மாகடலை அணையிட்டார் நிற்க, அம் மலைகளினின்றும் பொடியாகி வீழ்ந்த மணற்றாளிகளைக் கொண்டு சேர்த்து அவ்வணையில் அந்வயிக்க ஆசைகொண்டாரைப் போலே, அரங்கத்தமுதனாரும், அமுத மொழியரான தேசிகனும் வாயாரப் புகழ்ந்த ஸ்ரீ பாஷ்யகாரரின் பெருமையைப்பற்றி அப்பெரியோர்களின் அருளிச் செயல்களைக் கொண்டே அடியேனும் சிறிது வரையத் துணிந்தேன்.

## அவதார வைலக்ஷண்யம்

தேசமெலா முகந்திடவே பெரும்பூதூரில் சித்திரையிலாதிரை நாள் வந்து தோன்றிய யதிவரருடைய திருவவதாரம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தமே திருவவதரித்தது போன்ற மேன்மையையுடையதாக ஸகல ஸ்ரீ வைஷ்ணவரும் கருதியிருக்கிறார்கள். எம்பெருமானுடைய திருவவதாரங்களிற் காட்டில்



எம்பெருமானாருடைய திருவவதாரம் சேதனோஜ்ஜீவனத்தில் அதிகமாகத் தேர்ச்சியடைந்து நின்றது என்பது திருவரங்கத்தமுதனார் திருவுள்ளம்.

"மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து எங்கள் மாதவனே
கண்ணுறநிற்கிலுங் காண்கில்லாவுல கோர்களெல்லாம்
அண்ணலிராமாநுசன் வந்து தோன்றிய வப்பொழுதே
நண்ணருஞானந் தலைக்கொண்டு நாரணற்காயினரே."

இந்தப் பாசுரத்தில் கூறப்பட்டிருக்கும் அபிப்பிராயம் கேவலம் அதிசயோக்தியன்று, அதிவாதமுமன்று. ஈஸ்வரனுடைய மேன்மைக்கு இழுக்குமன்று. உண்மையில் ஸ்ரீய:பதிக்கு மியலாததொன்று ஸ்ரீ பாஷ்யகாரருக்கே ஸாத்தியமானது. அப்படியுமுண்டோவென்றால், ஸர்வஶக்தனுக்கும் போக்கொணாத தன்மையில் நின்ற ஸர்வாந்தர்யாமித்வம், ஶ்ரிய: பதித்வம், ஸமாதிகதரித்திரத்வம் இவைகளைப்போல் வேறொருகுணமும் உண்டு. அதாவது, தன்னையுள்ளபடி யறிந்தும் தன்னை உள்ள படி அனுபவிக்க இயலாமை. ஸர்வேஸ்வரன் பிறரால் அனுபவிக்கப்பட வேண்டியவனே யொழிய தன்னைத்தானே அனுபவித்துக்கொள்ள முடியாதவன். "தன்னைப் பிறரறியாத் தத்துவம்" என்பது போலவே "தன்னைத்தா னனுபவித்தறியா இன்பவெள்ளம்"* என்னும் பிருது தாங்கக்கூடியவன். உலகனைத்தும் ஓயும்பொழுதின்றி ஒருங்கே வணங்கி வழிபட்டு நிற்கத் தமது திருவடியில் என்ன மாதுர்யம் உள்ளதென்பதை யறிய வெண்ணியன்றோ ஸர்வேஸ்வரன் தமக்கு விடுமுறையாகிய ப்ரளய காலத்தில் தமது திருவடிப் பெருவிரலைப் பிடித்துச் சுவைத்துண்ணுவது? அப்படித் தமது மேன்மையைத் தாமே அனுபவித்தறியாதபோது எப்படித் தாம் பிறருக்கு அவ்வனுபவத்தை ஊட்டுவது? பகவதனுபவமாகிற பேரின்ப வெள்ளத்தை வாரியிறைக்கவல்ல வள்ளல் நம்மிராமானுஜன் போன்றவர்களாலல்லது உலகத்தை ஈஸ்வரனுடைய திருவடியிற் கூட்டிவைக்க இயலுமோ? உலக இயற்கையில் கண் என்னும் கருவி எல்லாவற்றையும் காணும். ஆயினும் அது தன்னைத்தானே நேராகப் பார்த்துக்கொள்ளும் சக்தியற்றது. இது காரணங்கொண்டே ஸர்வேஸ்வரன் தம்மைத் தாம் அனுபவித்தவரல்ல என்பது திண்ணமாய் விளங்கும். எம்பெருமான் கண்களின் அழகுதான் அவருக்கு ஶ்ரிய:பதித்வம் போன்ற பரத்வ ஸூசகம். எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தகாலையும் இக்கண்களினழகை மறைக்க இயன்றதில்லை. எம்பெருமானுடைய ரஹஸ்யமறிந்த மஹாத்மாக்கள் ஈஸ்வரனுடைய ஒவ்வொரு அவதாரத்திலும் அவருடைய கண்ணழகைக் கொண்டே அவர்தாம் பரதேவதை என்கிற உண்மையை உணர்ந்தார்கள். பொன்பெயரோன் கண்களுக்கு எரி விழித்த திருக்கண்கள் ப்ரஹ்லாதாழ்வானுக்கு ஸரோஜ ஸத்ருசங்களாகத் தென்படவில்லையா? முன்பு பார்த்தறியாதிருந்தும் வாலி பத்னியாகிய தாரை யுத்தகளத்தில் கண்ணழகைக் கொண்டே ராமனை ராமனென்று அறிந்தாளில்லையா? மார்க்கண்டேய ப்ரபிருதி முனிவரர்களெல்லாம் கண்ணனுடைய திருக்கண்களைக் காட்டியே யுதிஷ்டிரருக்கு கண்ணனுடைய பரத்வத்தை உணர்த்த வில்லையா? இப்படிப்பட்ட

---

*இதைக் கொண்டு பகவானுடைய ப்ரக்ருவத்திற்கு எவ்வித ஹானியும் கருதப்படவில்லையென நினைக்கிறோம். (ப-ர்)

தன்மை வாய்ந்து, ஈஶ்வரோஹ மென்றிருப்பாரைத் தோற்கடித்து "நமஸ்தே' என்று திருவடிகளிலே விழப்பண்ணுமவையாய் கரியவாகிப் புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அத்தாமரைத் தடங்கண்களி னழகைத் தாம் அனுபவித்து, அவ்வனுபவ ரஸம் தலைக்கொண்ட நம் உடையவருக்கல்லாது, அக்கண்களினழகை ஒருபொழுதும் நேரில் கண்டறியாத ஸர்வேஶ்வரனுக்கா சேதனர்களைத் திருத்திப் பணிகொள்ளுதல் ஸுலப ஸாத்தியம்? "மறக்குமென்று செந்தாமரைக் கண்ணொடு மறப்பன" தம்முள்ளே புண்டரீகாக்ஷனை மன்னப்பெற்ற பராங்குச முனியைப் போலவும், பால்யாத்ப்ர ப்ருதி ஸுஸ்நிக்தராய்த் தமது ஜ்யேஷ்டருடைய விஶ்வாமி ரக்ஷண விஹார ஸமர்த்தங்களான அபாங்க வீக்ஷணங்களில் ஒதுங்கி வர்த்தித்த இளைய பெருமாளைப் போலவும், நமது லக்ஷ்மணார்யரும் இளம்பருவம் தொடங்கி எம்பெருமானுடைய திருக்கண்களினழகை உள்ளபடி அறிந்தவராய், தமது சாஸ்த்ராப்யாஸத்தின் தலைப்பிலேயே பரப்ரஹ்மத்தின் கண்ணழகை வர்ணித்த உபநிஷத்தின் உள் பர்மத்தை அறிந்து வெளியிடவும், அதற்கு மாறுகப் பொருள்படுத்திய தமது ஆசானைக் கண்டிக்கவும் சக்தியமைந்தவராயுள்ள விஷயம் எல்லோரு மறிந்ததே. இப்படி யனுபவித்த வளுகையால்தான் 'வா:ஷியஜ்ஞ வஷிஜ்ஞ' என்கிற ந்யாயமாய் எல்லோருக்கும் எளிதாக உயர்ந்த சாஸ்த்ரார்த்தங்களை வெளியிடவும், ஸகல ப்ரமாணங்களையும் ஸமஞ்சஸப்படுத்தவும் சக்தி வாய்ந்தவரானார். இதனால் இந்த மண்ணகத்தைத் திருத்தித் திருமகள் கேள்வனுக்காக்கும் திறமை எம்பெருமானைக் காட்டிலும் எம்பெருமானாரிடத்து அதிகமாகவே தங்கியிற்கும் என்று புலப்படும். ஆகவே அமுதனார் மேலே கூறிய பாசுரத்தில் அருளிச்செய்திருப்பது நன்கு பொருந்தும் என்பதும் வெளியாகும்.

இவ்வளவு விலக்ஷணமான திருவவதாரம் ஸ்ரீ பாஷ்யகாரருடையது. இவ்வவதாரத்தில் உண்டான அவருடைய ஞானனுஷ்டானங்க ளெல்லாம் வரையப்பெற்றவிடத்து பரம பாவனமான சரித்திரமாகும். அவரது கல்யாண குணங்கள் அளவிறந்தவை. "திசையனைத்தும் ஏறும் குணன்" என்றும் "எண்ணில் பல்குணத்தன்" என்றும் "கொண்டலனைய வண்மை ஏவர்க் குரைத்தெம்பி ராமானுசன்" என்றும் "ஏரணிகீர்த்தி இராமானுசன்" என்றும் பலபடியாகப் புகழப்பெற்ற அக்குணங்களை யான் எடுத்துரைப்பது அஸாத்தியமென்றே விடுத்தேன். ஆயினும் இரண்டொரு அம்சங்களை மட்டும் சற்றே குறிக்க நியமனங்கொள்கிறேன்.

முக்கியமாக ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஒப்புயர்வற்ற பெருமைக்கு அவருடைய அரும் பெரும் விரக்தியே காரணம்.

## விரக்தி

ப்ரப்ரும்ஹத்தை நிர்த்தேசம் பண்ணவந்த ச்ருதி "எதன் பொருட்டு ப்ராம்மணர்கள் ஈஷணாத்ரயங்களையும் அறவே விட்டொழித்து பிக்ஷாடனர் களாய்த் திரிகிறார்களோ அதுதான் ப்ரம்ஹம்" என்று ஓரிடத்தில் அடையாளம் காட்டுகிறது. அப்படி ப்ரம்ஹத்தினிடத்து ஆசையைவைத்து அதன்பொருட்டு ஸகல ஐஹிகபோகங்களையும் துறந்து அதை உணர்த்தவந்த ச்ருதியை உண்மையாக்கின மஹாபுருஷன் நம் உடையவராவார். அதிலும் நம்மாழ்வாரைப்போல் கருவிருந்த நாள்முதலாக பரமபரிசுத்தரா யிருக்குமவர் ஆழ்வார்களில் சிலரைப்போல் தமது நடுவுநிலை ஒருக் காலும் கலங்காதவர். முதலில் பெண்டிரால் சுகங்களுய்ப்பான் புகுந்து பிறகு "வாணிலா முறுவல்" பாடாதவர். இவரை அடியொற்றி ஞானவைராக்ய பூஷணராய் நாளதுவரை விளங்கிவரும் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் இவருடைய வைராக்யத்தை ஒரு ச்லோகத்தில் ஸாதிக்குமிடத்தில் "பரதேவதை என்று ஸ்ரீய:பதியுடன் போட்டிக்குவரு மிருவர்களும் ஸ்த்ரீ ஸுகத்தில் ஆழ்ந்து தம்மையே இழந்திருப்பதில் ஆச்சரியமில்லை. அந்த ஸாக்ஷாத் பரதத்வமே அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து பெண்பாலர்களிடம் அகப்பட்டுக்கொண்டு தடுமாறுகிறது. உடையவர் திருவடிகளில் ஆச்ரயிக்குமவர்களுக்கோ மன்மதனுடைய ப்ரஸ்தாபம் ஒய்ந்து விடுகிறது. அவர்கள் மனத்தில் குமாரஸம்பவ ராஸக்ரீடாதி சரித்திரங்கள் எழுத அவகாசம் ஏற்படுவதில்லை" என்று தமக்கே உரிய அஸ் சாதுர்யத்துடன் ஸாதித்துப் போந்தார். வீடுமின் முற்றவுமித்யாதி ஆன்றோர் வாக்கியத்தை நன்குணர்ந்து அதன்படி மேம்பட்டொழுகியபடியாலும், உலகோர்க்கு உபதேசிப்பதில் எம்பெருமானிலும் பன்மடங்கு கருணையோடு உபதேசிப்பதாலும், எல்லா விதத்திலும் திருவாய்மொழிக்குப்போல் சகல சேதனர்களுக்கும் இதத்தாயா யிருப்பதாலும் தான் நம் ஸ்ரீ பாஷ்யகாரருக்கு பகவத் ராமானுஜன் என்று அசாதாரணமான திருநாமம் வழங்கிவருகிறது. "என்னமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்று பாடிய பாண்பெருமாளைப்போல் நம்மிராமானுஜப் பெருமானும் பகவன் வ்யாமோஹம் தலைக்கேறி இதரங்களை த்ருணமாய் மதித்திருந்தார் என்று நாம் தினமும் அனுசந்திக்கும் தனியனிலேயே இவருடைய விரக்தி புகழ்ந்து பேசப்படுகிறது.



இந்த விரக்தியில் ஒரு விசித்ரமுள்ளது. வ்யாமோஹத்திலிருந்து விடுபடுவது விரக்தி யென்றிருக்குங்கால் வ்யாமோஹிதரை விரக்தரென்று கொண்டாடுவ தெங்ஙனே யென்னில் அதில்தான் ராமானுஜ ஸித்தாந்த மடங்கி யிருக்கிறது. சாஸ்திரங்களின் எல்லையைக் கண்டவராயும், அனுஷ்டானத்தில் தனக்கு மேம்பட்டவரில்லை யென்ற நிலையில் நின்றவராயும், பகவதனுபவத்தில் ஆழ்வார்கள் போல் ஆழ்ந்து கரை கண்டவராயும் உள்ள இந்த ப்ரபு புருஷார்த்த நிஷ்கர்ஷம் செய்திருப்பதை இவர் திருவடியில் ஆஶ்ரயித்து அந்தங்கரா யிருந்த அமுதனார் நமக்குக் காட்டிக் கொடுத்திருக்கிறார்.

"சேம நல் வீடும் பொருளுந் தருமமும் சீரிய நற்
காமமுமென்றிவை நான்கென்பர் நான்கினும் கண்ணனுக்கே
ஆமது காமம், அறம் பொருள் வீடிதற்கென் றுரைத்தான்
வாமனன் சீலன், ராமனுசனிந்த மண்மிசையே."

என்கிறபடியே உலகோர்கள் அதுவரை கற்றிருந்த கல்வியை மாற்றி போதித்திருக்கிற அதிசயம் ஸ்ரீ ராமானுஜனிடத்தில் காண்கிறோம். அதற்கு முன் மோக்ஷ புருஷார்த்தம் தான் ப்ரதான புருஷார்த்த மென்றும் மற்றைய மூன்றும் அதற்கு உபகரணங்கள் என்றும் உலகில் பரவியிருந்தது. "முந்துற வுரைக்கேன் மடவார் கலவியை விடு" என்றும் "அதுவோ நன்றென்றங்க மருலகோ வேண்டில் அதுவே பொருளில்லையென்றும் உபதேசித்த விரக்தாக்ரேஸரர்களான ஆழ்வார்களின் அருளிச் செயல்களின்படியே ஈஷணத்ரயங்களையும் த்ருணமாக மதித்து உதறிய வைராக்கிய ராசியான ஸ்ரீ உடையவர் அன்றி வேறு எவர் காமமே ப்ரதான புருஷார்த்த மென்று சொல்ல உலகங் கொள்ளும்? "நின் புகழில் வைகுந்தம் சிந்தையிலும் மற்றினிதோ நீயவர்க்கு வைகுந்த மென்றருளும் வான்" என்றும்.

> "வழிபட்டோட அருள் பெற்று மாயன் கோலமலரடிக்கீழ்
> சுழிபட்டோடும் சுடர்ச்சோதி வெள்ளத்தின் புற்றிருந்தாலும்
> இழிபட்டோடும் உடலினிற் பிறந்து தன்சீர்யான் கற்று
> மொழிபட்டோடும் கவியமுதம் நுகர்ச்சி யுறுமோ? முழுதுமே."

என்றும் வினவிப்போந்த மாறன் பணித்த மறையை நன்கு உணர்ந்தவராகையால் ஸ்ரீ பாஷ்யகாரர் அம்மறையின் பொருளை அனுசரித்து மேற்கூறியவாறு ப்ரதான புருஷார்த்தம் கண்ணன் திறத்துக் காமமே யென்று கற்பித்திருக்கிறார். ஆதலால்தான் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் மோக்ஷத்தை த்ருணமாக மதிக்கும் பரமை காந்திகள் பல்லாயிரவர் உண்டாகி இவ்வுலகை வாழ்வித்திருக்கிறார்கள். ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தமே அனுபவ ஸித்தாந்தம். ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தமும் ஸ்ரீ விசிஷ்டாத்வைத மதமும் ஸ்ரீ உடையவருக்கு முன் இருந்திருக்கலாம். அவைகளை நன்கு பாதுகாத்து ப்ரவசனம் செய்தது மட்டுமே அவருடைய காரியமாகவு மிருக்கலாம். ஆனால் நமது மதத்தின் தற்கால ஒப்புயர்வற்ற ப்ரக்ரியைகளுக் கெல்லாம் நம் பாஷ்யகாரர்தான் உற்பத்தி ஸ்தானம். அனுபவிக்கத் திகட்டாததாய் அப்பொழுதைக் கப்பொழுது ஆராவமுதாகி ஆவியகமே தித்திக்கும் நிகில ஜகதாஸ்சர்யமான ஒரு வ்யக்தி விசேஷத்தை நமக்கு தெய்வமாய்க் காட்டிக் கொடுத்ததுடன் அத்தேவதையின் வாடாத மலரடிக் கீழ் பேரின்ப ரஸாஸ்வாதம் செய்யும் மார்க்கங்களையும், அனுபவிக்கும் விதங்களையும், ஆமுஷ்மிக லோகத்திலல்லாது ஐஹிக லோகத்திலேயும், ஸ்ரிய: பதியினுடைய உயர்ந்த அனுபவம் மாறுதபடி வாழும் வாழ்வு எத்தன்மைத்து என்பதையும் காட்டிக் கொடுத்த பரம உதாரனவார் நம்பெரும் பூதூர் மாமுனிகள்.

## பண்ணின உபகாரம்.

ஸ்ரீ ராமனுஜன் தோன்றி உலகம் பெற்ற நன்மைக்கு அளவு கிடையாது. "தாழ்வொன்றில்லாமறை தாழ்ந்து தலைமுழுதும் கலியே ஆழ்கின்ற நாள் வந்து" எண்ணில் மறைக்குறும்புகளை யெல்லாம் ஒழித்து, உயிர்கள் மெய்விட்டாதிப்பரனேடு ஒன்றும் என்று சொல்லும் அவ்வல்லலெல்லாம் வாதில்



வென்று, இத்தாரணியோர்கட்கு ஶரீர ஶரீரி பாவ ஸம்பந்தமென்னும் உண்மை நன் ஞான முரைத்து, மாயவன் தன்னை வணங்க வைத்த காரணமிவை உமக்கன்றென்று உயிர்கட்கோராரணமைத்து, தமது ப்ரவசனத்தாலும் அதிலும் மேம்பட்ட தமது உயர்தர அனுஷ்டானத்தாலும் ஸகல சேதனர்களும் ஐயப்பாடு நீங்கி தெளிந்த சிந்தையினராய்த் திருமாலுக்கே அடிமை பூண்டு நிற்க "கலியுங் கெடும் கண்டு கொண்மின்" என்ற ஆன்றோர் வாக்கை மெய்யாக்கி நமக்கெல்லாம் இப்படிப்பட்ட உன்னத மதத்தில் அந்வயிக்கும் பெரும் பாக்கியத்தையும் நல்கி யிருப்பது மெல்லாம் அம்மஹானுபாவன் செய்தருளிய உபகாரங்களில் சில. அவர் செய்தருளிய உபகாரங்கள் அனைத்தையும் முற்றுமுணர்ந்தவரில்லை யென்னும் தன்மையில் நின்றுள்ளது அவரது மஹிமை. இப்படி ஸகல சேதனர்கள் மனத்தும் எழின் ஞான விளக்கை ஏற்றி இருளனைத்தும் மாற்றிய இப்பெருந்தகைக்கொரு கைம்மாறு மாயனும் காண்கில்லாது கலங்குங்கால் நம்மவர்கள் அவரை அர்ச்சா ரூபியாக, மாமலராள் புணர்ந்த பொன்மார்பன் பொருந்தும் பதிதோறும் எழுந்தருளிப் பண்ணியிருப்பதும் மஹோத்ஸவாதிகள் கண்டருளச் செய்வதும், அவருடைய ஸ்ரீ ஸூக்திகளைப் பரவச் செய்வதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே?

## அவருடைய தயை.

ஸர்வேஸ்வரனுக்கும் ஸாத்தியமாகாதது ஸ்ரீ பாஷ்யகாரருக்கு ஸாத்தியமானதை "மண்மிசையோனிகள் தோறும்" என்கிற பாசுரத்தில் அனுஸந்தித்த அமுதனார் வேறொரு பாசுரத்தில் சேதன ரக்ஷணத்தில் ஸ்ரீ உடையவருக்கு ஏற்பட்ட கிருபை ஈஸ்வரனுக்கே யில்லை யென்று எடுத்துக் கூறி யிருக்கிறார். "உண்ணின்றுயிர்களுக்குற்றனவே செய்து அவர்க்குயவே பண்ணும் பரனும் பரிவிலனு"ய்த் தோற்றினும் நம்மிராமானுஜன் தோன்றி பல்லுயிர்க்கும் அருள் சுரந்து வீடேற வைத்த பின் "ஔதுங்கே ஜோதி வாத்தி ஹாவஹாரே, பஶுவெவூதஜிவஜூ வாதிதே தவஸ:வஸஷிஓ" என்றிப்படியான தமது உத்தம இடவகைகளிகழ்ந்திட்டு அழுக்கு மானிடர் தம்பால் இடவகைகொண்டாயினும் அவர்களை நற்பாலுய்க்கத் திருவுள்ள முகந்த ஸ்ரீய: பதியினது கருணையும் ஒரு பொருட்டாகாத வண்ணம் ஸ்ரீ உடையவருடைய அருள் பெருக்கெடுத்ததென்றால் அதன் தன்மையை அப்புறம் யார் அளவிடமுடியும்? அதனால்தான் "காரேய் கருணை இராமானுசா! இக்கடலிடத்தில் யாரே அறிபவர் நின்னருளின் தன்மை?" என்றுமுடித்தார்கள். நம்முன்னோர்களின் அப்படிப் பட்ட கிருபைதான் என்னவென்றால்:—

> "சிந்தையினேடு கரணங்கள் யாவுஞ் சிதைந்து முன்னாள்
> அந்தமுற்றாழ்ந்தது கண்டு, அவையென்றனக் கன்றருளால்
> தந்த வரங்கனும் தன்சரண் தந்திலன தானது தந்து
> எந்தை யிராமானுசன் வந்தெடுத்தலன்றென்னையே."

**சுதிவிலிஷ்டாது வுடைவெ ஜஜஂநவமொகுூ ஜாதநிவெஷா।**
**கரணகளைவரயொமம விதரவி வரஷமெவுமாய கருணைவஂ॥**

என்கிறபடி ப்ரளய காலத்தில் அசேதனத்தோடு வாசியற ஒளியற்று மயங்கிய சேதனர் தம் துர்த்தசையைக் கண்டு மனமிரங்கி க்ருபா கார்ய மாவ் கரண களேபரப்ரதானம் பண்ணியருளிய ஸ்ரீய: பதி அக்கரண களேபரங்களை பரமாத்ம விஷயத்திலும் அபரமாத்ம விஷயத்திலும் உபயோகப்படும் வழியில்

வைத்த படியால் அவைகள் அநாதி துர்வாஸனை ஸம்பந்தம் பெற்ற சேதனர்கள் விஷயத்தில் நற்கதிக்கு உபயோகப்படாது போய் விட்டன. ஸன்மார்க்க நெறியிதுவென்று விளக்க வந்த சாஸ்த்ரங்களும் அபார்த்தங்கள் செய்யப்பட்டு மார்க்கதரிசிகளாகாது மனத் தடுமாட்டத்திற்கே ஹேதுவாய் முடிந்தன. இப்படியாக ஸாத்யங்களாக அளவிட்ட வழிகளெல்லாம் சேதனர் திறத்துப் பயன்படா தொழிந்தன. இனி ஈஸ்வரனுடைய ஸித்தோபாயத்வ ரீதியில் தனது சரண்கொடுத்து ஸகலமானவையும் வீடு பெற்றுய்யச் செய்திருக்க வேண்டியதுதான் மிச்சம். அதையோ ஈஸ்வரன் செய்தருளினனில்லை. திவ்யம் ததாமி தே சக்ஷு: என்று கண்கொடுத்தவனும் ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஸாரதி பாரணிம் வ்யாஸே கைகொடுத்தவனுமான ஸர்வேஸ்வரன் தன் திருவடி விஷயத்தில் மட்டும் ஶரணம் வ்ரஜ: என்று காட்டிப்போந்தானே யொழிய அளித்துப் போந்தானில்லை. இப்படி எம்பெருமானுக்குத் தம் திருவடி சம்மந்தமாய் நேரிட்ட ஔதார்யக் குறைவை நீக்கி அத்திருவடியை ஸாமான்ய தைவதமென்னும் போது நின்ற பொன்னங் கழலென்றும் உலகோர்களுக்குத் தந்தருளிய பேரருள் நம்மிராமானுஜ முனியுடையதே. எம்பெருமான் திருவடியில் சரணாகதி யென்பது முன்னோர் முறையாயினும் அது பயன்படுமாறு நேரில் அநுஷ்டித்துக் காட்டி எம்பெருமான் பரம ரஹஸ்யமாய் உபதேசித்த வழியைப் பொது வழியாக்கி எல்லாரையும் வாழ்வித்தபடியால் தான் எம்பெருமானாரது அருளின் தன்மை சொற்கடந்து கிடப்பது. மேலும் எம்பெருமானுடைய திருவடி நிலையான ஸ்ரீ சடகோபன் செய்தருளிய த்ராவிட வேதத்தைத் தாம் தைரியமாய் அங்கீகரித்து அதற்கு ஆறாயிரப்படி என்னும் உரையை எழுதச் செய்து உலகோர்க்கு அளித்தபடியாலும், இன்றுவரை ஸன்னதி தோறும் எம்பெருமான் திருவடியை ஸ்ரீ சடாரி ரூபமாய்த் தொழுதடி பணியுமவர் சிரஸிலெல்லாம் தரிக்கும்படி ஒரு உயர்ந்த ஸம்ப்ரதாயத்தை ஏற்படுத்தியபடியாலும், ஸ்ரீ பாஷ்யகாரர் ஸர்வேஸ்வரன் தந்திலாத அவன் திருவடியைத் தந்தருளினர் என்று சொல்லத் தட்டில்லை. அன்றி "தானது தந்து" என்பதைத் தன் சரண" அதாவது யதிவாருடைய ஶரண் என்று பொருள் படுத்தியும் பொருந்தும். ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லாம் இராமானுஜனுடைய திருவடி ஸம்பந்தம் பெற்று அதையே பெரிதாகப் பாராட்டுகிறவர்களானபடியால் அவர்களுக்கெல்லாம் ஸ்ரீ உடையவர்தம் சரண் தந்தருளியுள்ளார் என்பதற்கையமென்ன? அதனால் தானே "சுபிஷம் ஹா மஜந தாமிரஶ்ரண ஜுஷ்டம்" என்று அவருடைய அடியிணை பெரியவர்களால் மங்களாஶாஸநம் செய்யப்பெற்றது. இவ்வாறு உத்தமர் சிந்தையுள் உதிப்பனவாய், எம்பெருமானுடைய திருவடிகளையும் அனுகல்ப பூதங்களாக்கினவைகளாய் அமுதிதவருதி விதிவதபளஷதங்களான நம் யதிவாருடைய திருவடித் தாமரைகள் நம்மால் ஆஶ்ரயிக்கப்பட்டு நமக்கு திரிவர்க்கத்தையும் அபவர்க்கத்தையும் நாமிட்ட வழக்காய் ஆக்கித் தந்தருளி பேருதவிபுரிந்து வருகின்றன.

ஸ்ரீ பாஷ்யகாரருடைய பேரருள் சேதனர்களுக்குமட்டும் பயக்கப்பட்டதன்று. தத்வத்ரயங்களையும் தமது இன்னருளால் அவர் வாழ்வித்தபடியை நமக்கு அந்த மஹாபுருஷனுடைய அபராவதாரமான நிகமாந்த தேசிகன் காட்டித் தந்திருக்கிறார். ஶிக்ஷாவபுடந க்ஷேணஷ பிலகாம் அநேக மனஸ்ஷிஷா । யதிஸ்தாவஸ்ஷேணவத உகஸீ த்ராம்ஸஶ த்ராம் பஶா ॥ என்று திரிவிக்ரமனாய் உலகை ஒரு தாளால அளவிட்டது போதாதென்று சுருதிகள் நான்கும் தேடுகின்ற தம்பதம் சிவப்ப வனவாஸமென்னும் வ்யா



ஜத்தால் பலமுறை மிதித்துப் பாவனமாக்கியருளிய சக்ரவர்த்தித் திருமகன்போல் இந்த யதி சக்ரவர்த்தியும் சிக்ஷையென்பதை வ்யாஜீகரித்து அசேதனமான ப்ரக்ருதியைத் தம் திருவடியால் பாவனமாக்கியருளினராம். ஈஸ்வர தத்வம் மட்டும் எம்பெருமானருடைய அருளுக்கு உட்படாததோ வென்றால் அதுவுமில்லை. ஸகல உலகங்களுக்கும் சேஷிகளான திவ்ய தம்பதிகள் தம்மிடத்தருள் குன்றவே உடையவரிடம் அருள் நீரை யாசித்தடைந்து தம் விடாயும் தம் ஆஶ்ரிதர்கள் விடாயும் தணித்துக் கொண்டதாகப் பெரியோர்கள் நமக்கு சொல்லி யிருக்கிறார்கள். உலகமெங்கும் அருளாளப் பெருமாள் என்றும் அருளாழியம்மான் என்றும் அசாதாரணமான உயர்வு பிருதுதாங்கி ஸக்ஷித்ருஷ்ணவித வஸாஷம் ததஹ்ருணஹ வஷேணம், ஸ்ரீஹஸ்திஶைல ஸ்ரீகருபிநாஶ்ரகம் ஸீக்ஷதேவம் என்றும், "முத்தி மழை பொழியும் முகில்" என்றும் உத்தரவேதியில் கொண்டவாரருள் மாரி" என்றும் புகழ்ந்து பேசப்பட்ட ஸ்ரீ கரிஶைலநாதன் எங்கிருந்து அப்பேரருளான நன்னீர் முகந்தார் என்றால் உடையவராகிற ஓயா ஸமுத்திரத்தினின்று என்றேற்படுகிறது.

உதந்வதத்ய யாவஸாயம்ஸ நிதிதாவீக்ஷாவிஸஸம் வய:
காமேந: கரிஶைலக்ருஷ்ணஜலத: காஞ்சியாகம் வஷந்தி"

என்கிற இந்த பரம ரஹஸ்யத்தை வெளியிட்டு ஸ்ரீ நிகமாந்த தேசிகன் ஸ்ரீ பாஷ்யகாரருடைய கருணைக்கு ஒரு அளவு ஏற்படுத்தினர் போலும்.

இப்படி "களஸஜுத்ரா நொகஜதஹ்ராம்ஸஷவெயம் உஜவிதி" என்று சொல்லப்பட்ட தன்மையில் அமைந்த ஸ்ரீ ராமாவதாரம்போல் இந்த ஸ்ரீ ராமானுஜாவதாரமும் சித், அசித், ஈஸ்வரன் என்கிற தத்வ த்ரயங்களுக்கும் அருள்வழங்கி மேன்மையை அடைவித்த திருவவதாரமா யிருக்கும். ஸர்வேஸ்வரனுக்கும் பெரிய பிராட்டியாருக்கும் சேர்ந்து ஒரு தாகவிடாய் ஏற்படுமானால் அவ்விடாயை நம் ஸ்ரீ பாஷ்யகாரரைப் போன்ற மஹான்களாலல்லது மற்றவரால் நிவர்த்திக்க முடியுமா? வாஸதைவஸ்வருபிதி ஸஉஸதாவஷதிமூஜஸ: என்று சோகித்தவனுக்கு பரமோதாரராய் பரமேகாந்திராய் பரம பரிசுத்தராய் விளங்கும் நம் உடையவர் திருக்கையினின்றும் தீர்த்தம் பருகுவதைக்காட்டிலும் உகப்பான விஷயம் வேறிருக்குமோ? அப்படி பரம க்ருபா நிதியான ஸ்ரீ பாஷ்யகாரர் தம் திருக்கைகளினால் திருநீரிட்டு வளர்த்ததாலல்லவோ "கருஶஜஜயிகதஸ்ரீவஜீகருஶாவி" என்றும் "கஸிஶிவரிவிடம் வஸாயித: கருவாகஷ:" என்றும் பின்புள்ள பக்தாக்ரகண்யர்கள் அனுபவிக்கும்படி நம் கரி ஶைலநாதன் நம் ஊனக்கண்ணும் காண தமதனைத்துமடியார் தமக்கு வழங்கியும் ஞாம் மிக விளங்குவது? இங்ஙனம் அருள்மிகுந்தொரு வடிவாய் அவதரித்தருளிய வள்ளலின் பெருமையை நன்குணர்ந்த அமுதனார் இனி நமக்கெல்லாம் சேஷி யென்றிருக்கும். ஸர்வேஸ்வரனும் இராமானுஜனிடத்து சேஷத்வத்தை வஹித்து அதாவது இராமானுஜன் அடைவித்த எம்பெருமான் என்னும் வடிவில் வந்தாலல்லது அவனைத் தாம் வேண்டாதபடியை விண்ணப்பித்துக் கொள்ளுகிறார்: "கையில் கனியென்னக் கண்ணனைக் காட்டித்தரினும் உன்றன் மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான்" என்ற ஆசாரியபக்தி இதிலும் மேம்பட்டிருக்க இயலுமோ? இன்னும் அதிகம் ப்ரபந்தம் வளர்த்தினால் பகவதபசாரம் இன்னும் பெருகும் என்று தான் இப்பாசுரத்துடன் ப்ரபந்தத்தைத் தலைக்கட்டத் தொடங்கினர் போலும். எம்பெருமான், எம்பெருமானர் இவர்கள் திறத்து முறையே தமக்குள்ள ஆதரம் யார் பக்கல் அதிகம் என்பதை "செய்ததலைச் சங்கம்" என்கிற பாசுரத்தில் அனுஸந்தித்

தவராகையால் போகப்போக அமுதனுருக்கு உடையவரிடத்திலுள்ள பக்தியும் ப்ரேமையும் தலைப்பற்றி வாய்க்கொண்டு பெருகா நிற்கின்றது.

ஸ்ரீ பாஷ்யகாரருடைய கீர்த்தியின் பெருமையை அமுதனுர் இப்படி அனுபவித்திருக்க ஸ்வாமி தேசிகன் அனுபவித்திருக்கும்படி இன்னும் அழகு திருமாலை யல்லது தெய்வ மென்றேத்தாத தம் வைராக்கியத்தைக் குறித்துப் பேசும் பொழுதும், திருமாலிடத்தே புருஷார்த்தம் யாசிப்ப தென்றுல் பகவதனுக்ரஹம் தவிர வேறென்றையும் தாம் யாசிக்க இயலாது என்று பேசும் பொழுதும், தமது வாக்கை அதிச்லாக்கியமாகப் புகழ்ந்து கொள்ளுகிறுர். ஸ்வாமி தேசிகன் "ஸாயம்ஸம்புல்ல மல்லிமதல்லிகா பரிமள முசாவாசா" என்று ஓரிடத்திலும், "ஸமாஜநாஸிகநீரஜாஸக ஸ்ரஜமணீய ஸௌரஸம்ஸ்தவா:" என்று மற்றேரிடத்திலுமாக தமது வாக்மிகுந்த கந்தம் கமழும் தன்மையது என்று ஸாதிக்கிறுர். அதற்குக் காரணம் என்னவென்பதை யதிராஜ ஸப்ததியில் அனுஸந்திக்கிறுர் "வாக்தோஷாதிவாஹ" என்கிற ச்லோகத்தில் ஸ்ரீ பாஷ்யகாரருடைய கீர்த்தி என்கிற தேத்தாங் கொட்டை ஸம்பந்தப்பட்டவுடன் அதனுல் பருஷ, பரிவாத, பைசுனங்களாகிற வாக்கின் மஹத்தான கல்மஷங்களெல்லாம் போய்த் தெளிந்து அதி ரமணீயமாய், பரிமளங்களுக்கெல்லாம் ஓரிருப்பிடமான எம்பெருமானுடைய நாபீகமலம் மலர்ந்து வீசும் வாசனையும் ஏகதேசமாய்ப் போகும்படி ஸ்வாமியினுடைய வாக்கானது சோபிக்கிறதாம். இதற்குப் பிறகு யதிராஜருடைய கீர்த்தியைத் தனித்தெப்படி சொல்வது என்று கொண்டு யதிராஜர் திருவடியை ஆச்ரயித்தவர்கள் புகழே நாடெங்கும் பரவியிருக்கிறது என்பதை

"யச்ப்ரவர்த்தாவிததீர்த்த ஸம்ஹிதாம் ஸம்ஸ்ருதாம் யதீந்த்ராணாம் ।
ச்ருதிசிரோநிகடம் ப்ரதயந்தி யதா கீர்த்தய: ப்ரஜாமதித்ர: ॥"

பரம ஆஹ்லாதத்துடன் அனுஸந்தித்துக் களிக்கிறுர்.

பரமயோகி ஸ்ரேஷ்டரான நம்மாழ்வார் நம்மிராமானுஜன் திருவவதரித்து ஸ்ரீ வைஷ்ணவ ஸமயம் தழைக்கப் போகிறதென்பதை முன்னமே உணர்ந்து "கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்" என்று தாம் பார்த்ததை விண்டு வெளிப்படையாய்ச் சொல்லாது வாழ்த்தியிருக்கிறுர். பகவத் ராமானுஜருக்குப் பிற்பட்டவதரித்த ஆசார்ய ஸ்ரேஷ்டரான தூப்புல் பிள்ளை நம்மாழ்வார் மறைபொருளாய் உணர்த்தியதை பஹிரங்கமாக உலகிற்குக்காட்டி ஆனந்தித்துப் பல்லாண்டு பாடுகிறுர்.

"அஹிமமதஸமேதஸ்வைரஸஞ்சாரலோலா: யதிப்ரவிதி பதபத்மம் ।
ஹரிஹஸ்தாஸ்த்ர ரவிகா: ப்ரஸ்ரவம் க்ருபணக்ருபாஸமுத்யாஸ்ஸ்ரீஸமேதே"

எந்த உடையவருடைய திருவடித்தாமரைகள் அஞ்ஞானமாகிய பெருங்காட்டில் இஷ்டம்போல் ஸஞ்சரிக்கிற அடியேங்களுடைய மனங்களாகிற யானைகளுக்கு ப்ரதம நிகளங்களாயுள்ளனவோ, யாதொரு அடியிணைகள் என்னவர் நெஞ்சம் அஞ்சிக் கொதித்திடமாறி நடப்பனவோ, யாதொரு பாதங்கள் பிறப்பென்னும் பெருநோய்க்குப் பெருமருந்தோ, அப்பொன்னடிகள் நமக்கும் அகில உலகத்துக்கும் ஸகல மங்களங்களையும் கொடுத்தருள்வனவர்குக.

"வைப்பாய் வான்பொருளென்று நல்லன்பர் மனத்தகத்தே
எப்போதும் வைக்கு மிராமானுசனை, இருநிலத்தில்
ஒப்பாரில்லாத உருவினையேன் வஞ்ச நெஞ்சில்வைத்த
முப்போதும் வாழ்த்துவன் என்னுமிது அவன் மெய்புகழ்க்கே."

---



நாராயணபரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர: - அநந்தமவ்யயம் கவிம் ஸமுத்ரேऽந்தம் விச்வசம்புவம் - பத்மகோசப்ரதீகாசம்" உத்தராநுவாகே, "ஸ ப்ரஹ்மா ஸ சிவ: ஸேந்த்ர: ஸோऽக்ஷர: பரம: ஸ்வராட்" இத்யந்தே. தத்ர, ஸர்வசாகாப்ரத்யயந்யாயேந "அக்ஷர, சிவ, சம்பு, பரப்ரஹ்ம, பரஞ்ஜ்யோதி:, பரதத்த்வ, பராயண, பரமாத்ம" இத்யாதி ஸர்வசப்தை: தத்தத்குணயோகேந நாராயண ஏவ ப்ரதிபாத்ய தமஸ்மின்ஸூக்தே ஸர்வஸ்ய தச்சரீரத்வம் தத்வ்யாப்யத்வம் ததாதாரத்வம் தந்நியாம்யத்வம் தச்சேஷத்வம் ததாத்மகத்வம் ச ப்ரதிபாத்ய, ப்ரஹ்மசிவயோ: இந்த்ராதிஸமாநாகாரதயா தத்விபூதித்வம் ச ப்ரதிபாதிதம் । உக்தம் ச

தேவம்" என்று ஆரம்பித்து "ஸோऽக்ஷர: பரம: ஸ்வராட்" என்னும் வரையில் காணப்படும் வாக்யங்களில், ஸகல சாகைகளிலும் பரதத்வத்தை நிர்த்தேசிப்பனவாகக் காணப்படும் "அக்ஷர, சிவ, சம்பு, பரப்ரஹ்ம, பரஞ்ஜ்யோதிஸ், பரதத்வ, பராயண, பரமாத்மா' முதலான சப்தங்கள் எல்லாம் தம் தம்பக்கல் குறிக்கப்படும் குணங்களின் வழியாக நாராயணனைக் குறித்தே ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறபடியால் அவைகளால் நிர்த்தேசிக்கப்படும் வஸ்து அந்த நாராயணனே என்றும், அவனைத் தவிர்த்த மற்றை வஸ்துக்களெல்லாம் அவன் அங்கங்களாயும், அவனுக்கு வ்யாப்யங்களாயும், அவனை ஆதாரமாக உடைத்தா யிருப்பனவாயும், அவனுக்கு நியாம்யங்களாயும், அவனுக்கு சேஷங்களாயும், அவனை ஆத்மாவாக உடைத்தா யிருப்பனவாயும் நிற்கின்றனவென்றும், ப்ரஹ்மா சிவன் இவர்களும் இந்த்ரனைப் போலவே அவனுடைய விபூதிக்குள் அகப்பட்டவர்கள் என்றும் ப்ரதி பாதிக்கப்பட்டிருக்கின்றது.

---

'ஸமுத்ரேऽந்தம்'-ஸமுத்ரே ஸ்தாநம் யஸ்ய (ஸமுத்ரத்தை ஸ்தானமாக உடைய) என்பது அர்த்தம். 'அந்த:' என்பதற்கு 'ஸ்தாநம்' என்று பொருள் உண்டு. 'அந்த: ஸமாப்தௌ ஸ்வரூபே ச' என்பது நிகண்டு.

'ஸ ப்ரஹ்மா ஸ சிவஸ்ஸேந்த்ர: ஸோऽக்ஷர: பரம: ஸ்வராட்' அந்த நாராயணனே சதுர்முக ப்ரஹ்மா, அவனே சிவன், அவனே இந்த்ரன், அவனே முக்தஜீவன்;' இப்படிச் சொல்லப்படும் ஸாமாநாதிகரண்யம் 'நாராயணனுக்கு, மற்ற சேதந அசேதந வஸ்துக்களெல்லாம் விபூதிகள்' என்பதை ஆதாரமாகக் கொண்டது. இந்த்ரன்போல, ப்ரஹ்மாவும் சிவனும் அவனுடைய விபூதிகளுக்கு உட்பட்டவர்கள் என்பது தாத்பர்யம். இவ்விதம் ச்ருதி சொல்லுகையில், ப்ரஹ்மா சிவன் முதலானவர்களை ஜகத் காரணமென்றும், எல்லாரையும் காட்டிலும் பரமென்றும் எப்படிச் சொல்லக்கூடும்? என்பது குறிப்பு.

'அக்ஷர:—என்பது முக்தனைக் குறிக்கின்றது. 'ஸ்வராட்' என்பதற்கு 'கர்மபந்தத்திற்கு உட்படாமல் இருப்பவன்' என்பது பொருள்.

வாக்யம் கேவலபரதத்வப்ரதிபாதநைகபரம்; அத்ர கிஞ்சிதுபாஸநம் ந விதீயதே । அஸ்மிந்நநுவாகே ப்ரதிபாதிதஸ்ய ஸர்வஸ்மாத்பரஸ்ய பரதத்வஸ்ய ப்ரஹ்மண: உபாஸநாதிகம், "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" இத்யாதிஷு வாக்யாந்தரேஷு விதீயதே ।

---

இந்த அநுவாகத்தில் காணப்படும் வாக்யம் பரதத்வத்தை நிர்ணயிப்பதற்காகவே ஏற்பட்டது; ஆகையால் அதைத் தவிர்த்த வேறு உபாஸநம் முதலியதொன்றும் விதிக்கப்படவில்லை. இவ்விதம், மற்றை எல்லாவற்றையும் காட்டிலும் பரமென்று இந்த வாக்யத்தில் ப்ரதிபாதிக்கப்படும் ப்ரஹ்மத்தின் உபாஸநம் முதலியவை, ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" என்னும் வாக்யாந்தரங்களில் விதிக்கப்படுகின்றன.

---

உக்தம் ச வாக்யம்—இந்த "ஸஹஸ்ரஶீர்ஷம் தேவம்" இத்யாதியான வாக்யத்தின் குறிப்பை விளக்குகின்றார். "இந்த வாக்யத்திற்கு ஏன் ப்ரஹ்மா சிவன் முதலான தேவதைகள் பரமாக அர்த்தம் செய்யக்கூடாது?" என்று ஒரு சங்கையைச் செய்து கொண்டு, 'இந்த வாக்யத்தில் தேவதைகளின் உபாஸநத்தைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை; எந்த வஸ்து ஸர்வகாரணம் என்பது மாத்ரம் சொல்லப்படுகின்றது' என்று பரிஹாரம் சொல்லுகிறார். 'புருஷஸூக்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட புருஷ தத்வமே ஸர்வ காரணம்' என்பதுதான் இந்த வாக்யத்தின் குறிப்பு.

அஸ்மிந்நநுவாகே—இந்த வாக்யத்தில் நிர்ணயிக்கப்பட்ட பரமகாரண வஸ்துவின் உபாஸநம், "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" இது முதலாய வாக்யங்களால் விதிக்கப்படுகின்றது.

இதுவரையில், தமது பக்ஷத்திற்கு ஸாதகங்களான ப்ரமாணத்தை சொல்ல உபக்ரமித்து, முதலில் காரண வாக்யங்கள், பிறகு ஸ்ரீ புருஷ ஸூக்தம், பிறகு நாராயண அநுவாக வாக்யம் என்னும் க்ரமத்தில் ப்ரமாணங்கள் உதாஹரிக்கப்பட்டன. ஸ்ரீ ஆளவந்தாரும்,

> "நாவேக்ஷஸே யதி ததோ புவநாந்யமூநி
> நாலம் ப்ரபோ பவிதுமேவ குத: ப்ரவ்ருத்தி:"

என்பதால் காரண வாக்யங்களையும், பிறகு

> "ஸ்வாபாவிகாநவதிகாதிஶயேஶித்ருத்வம்
> நாராயண! த்வயி ந ம்ருஷ்யதி வைதிக: க: ?"

என்பதால் ஸ்ரீ புருஷ ஸூக்தத்தையும், பிறகு

> "ப்ரஹ்மா ஶிவஶ் ஶதமக: பரம: ஸ்வராடிதி"

என்பதால் நாராயண அநுவாகத்தையும் விவக்ஷித்து ஸ்வபக்ஷத்தை ஸ்தாபித்திருக்கிறார்.



அத:, "ப்ராணம் மநஸி ஸஹ காரணை:" இத்யாதி வாக்யம், ஸர்வகாரணே பரமாத்மநி கரணப்ராணாதி ஸர்வம் விகாரஜாதம் ஸம்ஹ்ருத்ய தமேவ பரமாத்மாநம் ஸர்வைஶ்வர்யஸம்பந்நம் ஶம்பும் த்யாயீத 'இதி பரப்ரஹ்மபூதநாராயணஸ்யைவ த்யாநம் விதயாதி । "பதிம் விஶ்வஸ்ய" இதி,

---

"அத: ....."—இவ்விதம் நாராயணனே பரமகாரணமென்று ப்ரதிபந்நமாயிருக்கிறபடியால், "ப்ராணம் மநஸி" இத்யாதியான வாக்யம் பரப்ரஹ்மமாயிருக்கும் நாராயணனுடைய த்யாநத்தையே விதிக்கின்றது என்று சொல்லவேண்டும். ஏனென்றால், அந்த வாக்யம், 'இந்த்ரியங்கள் ப்ராணன் இவை முதலிய விகார வஸ்துக்களை விகாரவஸ்து அன்றிக்கும் ஸர்வ காரணமாயும் இருக்கும் பரமாத்மாவினிடத்தில் உபஸம்ஹாரம் செய்யப்பட்டவையாக அநுஸந்தாநம் செய்துகொண்டு, ஸர்வத்துக்கும் ஈசானனை (ப்ரபுவாக) இருக்கும் அந்தப் பரமாத்மாவையே த்யாநம் செய்யவேண்டும்' என்றன்றோ சொல்லுகின்றது? ஸர்வ காரணமான வஸ்து நாராயணனே என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறபடியால், இந்தவாக்யத்துக்கு நாராயணனிடத்திலேயே நோக்கு

---

அத:—இவ்விதம் ஸ்வபக்ஷத்தை விவரித்துவிட்டு, கீழ்ல் பூர்வ பக்ஷியால் உதாஹரிக்கப்பட்டுள்ள ச்ருதி வாக்யங்களின் அர்த்தத்தை விவரிக்கப் புகுகிறார். 277-279 பக்கங்களைப் பார்க்க.

அத:=ஆகையால். காரண வாக்யங்களாலும் ஸ்ரீ புருஷ ஸூக்தத்தினாலும் நாராயண அநுவாகாதிகளாலும் 'நாராயணனே பரமகாரண வஸ்து' என்பது ஸித்திக்கிறபடியால். இது மாத்ரமன்று; 'ப்ரஹ்மா சிவன் முதலான வேறு தேவதைகள் நாராயணனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டு அவனால் ஸம்ஹரிக்கப்பட்டும் வருகிறார்கள் என்பது ஸித்திக்கிறபடியாலும்' என்றும் ஸூசிக்கப்படுகின்றது. 'நாராயணனே பரம காரணம்; மற்றை ப்ரஹ்மா முதலானவர்கள் அவனுடைய விபூதியுள் அடங்கினவர்கள்' என்பது ஸித்தித்து விட்டால், பூர்வபக்ஷியால் உதாஹரிக்கப்பட்டுள்ள ச்ருதிவாக்யங்களுக்கு அர்த்தம் சொல்வது அதிஸுகரம் என்பது குறிப்பு.

"ப்ராணம் மநஸி...." இது, பூர்வபக்ஷியால் உதாஹரிக்கப்பட்டவைகளுள் முதலான வாக்யம். இது "ஶம்பும் த்யாயீத" என்று முடிகின்றது. இவ்விடத்தில் 'ஶம்பு' என்னும் சப்தம் சிவனைக் குறிக்கின்றதன்றோ என்பது சங்கை. இதற்கு ஸமாதாநம்:—'இந்த வாக்யம் த்யாநத்தை விதிக்கின்றது; த்யாநிக்கப்படவேண்டிய வஸ்துவோ ஸர்வகாரணமாயுள்ள வஸ்துவே; அந்த வஸ்து புருஷ ஸூக்தாதிகளில் ப்ரதிபாதிக்கப்படும் நாராயணனென்கிற புருஷ தத்வமே; ஆகையால் இந்த வாக்யத்தில் 'ஶம்பு' சப்தத்தால் குறிக்கப்படும் வஸ்து நாராயணனாகவே இருத்தல் வேண்டும்' என்பதுதான். தவிரவும் 'ஶம்பு' என்னும் சப்தம் நாராயணனையே முக்யமாகக் குறிக்கின்றது என்பதும் பரிஹாரம். இதற்கு ப்ரமாணம்

"ந தஸ்யேஶே கஶ்சந" இதி ச தஸ்யைவ ஸர்வேஶ்வரத்வம் ப்ரதிபாதிதம் |

அத ச, "ஸர்வைஶ்வர்யஸம்பந்ந: ஸர்வேஶ்வர: ஶம்புராகாஶமத்யே த்யேய:" இதி, நாராயணஸ்யைவ பரமகாரணஸ்ய ஶம்பு-"ஶப்தவாச்யத்வம் ப்ரகாஶயதி | "கஶ்ச த்யேய:?" இத்யுத்தரம், "காரணம் து த்யேய:" இதி கார்யவஸ்துநோ த்யேயதாவாரணபூர்வக காரணைகத்யேயதாவசநாத், தஸ்யைவ நாராயணஸ்ய பரம காரணதா ஶம்பு-ஶப்தவாச்யதா ச பரமகாரணப்ரதிபாதநைகபரே

---

என்பது வ்யக்தம். ஸர்வத்துக்கும் ஈசானும் நாராயணனே என்பது, "பதிம் விஶ்வஸ்ய" "ந தஸ்யேஶே கஶ்சந" இத்யாதியான ச்ருதி வாக்யங்களால் விளங்கும்.

"அத ச......"——இந்தக் காரணத்தினலேயே, "ஸர்வைஶ்வர்யஸம்பந்ந:" இத்யாதி வாக்யமும் நாராயணனுடைய த்யாநத்தையே விதிக்கின்றது என்பது விளங்குகின்றது. நாராயணனே பரம காரணமன்ருே? 'ஶம்பு' என்னும் சப்தத்தாலும் அவனே சொல்லப்படுகிருனன்ருே? "கஶ்ச த்யேய:? காரணம் து த்யேய:" இத்யாதியான ப்ரச்ந ப்ரதிவசநங்களால், 'காரணவஸ்துவே த்யாநம் செய்யத் தகுந்தது; கார்யவஸ்து த்யாநத்திற்கு அநர்ஹம்' என்பது ஏற்படுகின்றபடியாலும் 'அப்படிப்பட்ட பரமமான காரணவஸ்துவும் நாராயணனே; ஶம்பு என்னும் சப்தத்திற்கு வாச்யனும் அவனே' என்பது பரமகாரணத்தையே ப்ரதிபாதிக்கும் நாராயண அநுவாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியாலும், அவைகளுக்கு விருத்தமாக இந்த

---

"பதிம் விஶ்வஸ்ய" "ந தஸ்யேஶே கஶ்சந" என்னும் வாக்யங்கள். இந்த வாக்யங்கள் நாராயணனையே ஜகத்துக்கெல்லாம் பதியென்றும், அவனுக்கு மேற்பட்டு ஒருவனும் இல்லையென்றும் சொல்லுகின்றன.

அத ச—"ஸர்வைஶ்வர்யஸம்பந்ந: ஸர்வேஶ்வர: ஶம்புராகாஶமத்யே த்யேய:" என்பது இரண்டாவது வாக்யம். கீழ்க்கூறப்பட்டுள்ள காரணத்தாலேயே இந்த வாக்யமும் நாராயணனுடைய த்யாநத்தையே விதிக்கின்றது என்று அறியவேண்டும். 'ஶம்பு' என்பது சிவனுடைய பெயர் அன்ருே?' என்னும் சங்கைக்கு, "விஶ்வாக்ஷம் விஶ்வஶம்புவம்" என்று நாராயணனைக் குறிப்பதாக ஶம்பு சப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருப்பது ஒரு ஸமாதாநம். தவிரவும், ப்ரகரணமும் 'இந்த வாக்யம் நாராயணபரம்' என்பதை விளக்குகின்றது. "கஶ்ச த்யேய:?" [யார் த்யாநிக்கத் தகுந்தவன்?] என்னும் கேள்விக்கு, 'காரணம் து த்யேய:' [ஸர்வகாரணமே த்யாநிக்கத் தகுந்தது] என்று ப்ரதிவசநம் சொல்லி யிருக்கிற படியால் பிறகுவரும் ப்ரக்ருத த்யாந விதி வாக்யங்கள் ஸர்வ காரணத்தைப் பற்றியே இருத்தல் வேண்டுமென்ருே? 'ஸர்வைச்வர்ய ஸம்பந்நன்' என்றும் 'ஸர்வேச்வரன்' என்றும் ஸர்



நாராயணாதந்யாக ஸைவ ப்ரதிபந்நேதி தந்நிரோதவ்யம் உபரிஷ்டாத் காரணஸ்யைவ த்யேயதாவிதாநாத் ந புநஸ்தத் |

யதி "ததோ யதுத்தரதரம்" இத்யத்ர பரதரத்வம் பரதரஸ்ய ப்ரதீயத இத்யுச்யதாபி, ததவஸ்துந ப்ரதீத்யர்த்தம் | ததாஹி—"யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித் யஸ்மாந்நாணீயோ ந ஜ்யாயோऽஸ்தி கஶ்சித்" இத்யத்ர "யஸ்மாதபரம் கிஞ்சிதபி பரம் நாஸ்தி" இத்யுக்தத்வாத் 'யஸ்மாதந்யஸ்ய கேநாபி ப்ரகாரேண பரத்வநிஷேதஸ்ய வசநம் நாஸ்தி' இத்யர்த்த: | அணீயஸ்த்வம்—ஸௌக்ஷ்ம்யம்; ஜ்யாயஸ்த்வம் ஸர்வேஶ்வரத்வம், ஸர்வ

---

வாக்யத்திற்கு வேறு அர்த்தம் கல்பிப்பது, காரணவஸ்துவின் த்யேயத்வத்தையே விதிக்கும் இந்த வாக்யத்திற்கு யுக்தமாகமாட்டாது.

"யதி......."—"ததோ யதுத்தரதரம்..." இத்யாதியான வாக்யத்தில் 'நாராயணனைக்காட்டிலும் பரதரமான வஸ்து ஒன்று உண்டு' என்பது தோன்றுகின்றதே என்னும் சங்கையும் இதனலேயே பரிஹரிக்கப்பட்டதாகி விடுகின்றது. எப்படியெனில்:—நாராயணனைக் காட்டிலும் பரதரமான வஸ்து ஒன்று உண்டு என்று சொல்வது, "யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்" இத்யாதியான வாக்யத்திற்கு அத்யந்தம் விருத்தமாகும். "யஸ்மாத் பரம்" இத்யாதியான வாக்யத்தின் அர்த்தம் என்னவென்ருல், 'எவனைக்காட்டிலும் வேறுபட்ட ஒரு வஸ்துவும், பரமான வஸ்துவன்ருே' என்பதுதான். 'அதாவது இந்தப் புருஷனைக்காட்டிலும் எந்த ப்ரகாரத்தாலும் வேறுபட்டதான ஒரு வஸ்துவுக்கும், பரத்வம் என்பது இல்லை' என்று சொன்னதாயிற்று. 'அணீய:' என்பதற்கு 'ஸூக்ஷ்மம்' என்பதும், ஜ்யாய:' என்பதற்கு 'ஸர்வேச்வரன்'

---

வகாரணத்தைக் குறிக்கும் அநுவாதமும் இந்த வாக்யத்தில் காணப்படுகிறபடியால், எது ஸர்வகாரண வஸ்துவென்று பூர்வம் நிர்த்தாரிக்கப் பட்டிருக்கின்றதோ அதுவே இவ்விடத்தில் த்யாநிக்கப்பட வேண்டுவதாகச் சொல்லப்படவேண்டும் என்பதும் வ்யக்தம். அதற்கு விருத்தமாக வேறு அர்த்தம் சொல்வது யுக்தமாகமாட்டாது.

யதி "ததோ யதுத்தரதரம்—". இது மூன்ருவது வாக்யம். இந்த வாக்யத்தில் தோன்றும் சங்கை என்னவென்ருல்—இந்த வாக்யத்திற்கு ஶ்ருதாத: பின்வருமாறு ஒரு அர்த்தம் தோன்றும் :—தத:—அதைக்காட்டிலும், யதுத்தரதரம்—யாதொரு பரதரமான வஸ்து உண்டோ, அதுதான் அரூபம், அதுதான் அநாமயம். இந்த அர்த்தத்தைப் பார்த்தால், புருஷஸூக்தத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள புருஷ தத்வத்தைக் காட்டிலும் பரதரமாக ஒரு வஸ்து உண்டென்று ச்ருதி சொல்வது போலத் தோன்றும். இந்தத் தோற்றம் தவறுதல் என்பதற்கு ஸமாதாநம் சொல்லி, இந்த வாக்யத்தின் உண்மையான அர்த்தத்தையும் விளக்குகிருர்.

முதலில், ஶ்ருதாத: தோன்றும் அர்த்தம் அஸம்பத்தமாகும் என்பது பின்வருவதால் விளங்கும். "யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்" [எதைக்காட்டிலும் வேறு

**ஸர்வவ்யாபிநஸ் ஸர்வேச்வரஸ்ய । அத: தஸ்மாதிதரஸ்ய அணீயஸ்த்வம் ஜ்யாயஸ்த்வம் ச நாஸ்தீத்யர்த: । "யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்" இதி வாக்யார்தஸ்ய இதரஸ்ய அணீயஸ்த்வ ஜ்யாயஸ்த்வ நிஷேதேந, தஸ்மாதிதரஸ்ய பரத்வம் ந யுஜ்யதே ।**

**கதம் தர்ஹி அஸ்ய வாக்யஸ்யார்த: இதி சேத் உச்யதே । அஸ்ய ப்ரகரணஸ்ய உபக்ரமே, "தமேவ விதித்வாதி ம்ருத்யுமேதி... நாந்ய: பந்தா வித்யதே அயநாய" இதி பரமபுருஷவேதநஸ்யைவ அம்ருதத்வஹேதுதாம் தத்வ்யதிரிக்-**

என்பதும் பொருள். இந்தப் புருஷன் ஸர்வத்தையும் வ்யாபித்து நிற்கிறவனாகவும், ஸர்வத்திற்கும் ஈச்வரனாகவும் இருக்கிறபடியால், இவனைத் தவிர்த்த மற்ற ஒரு வஸ்துவுக்கும் அணீயஸ்ஸாக இருக்கும் தன்மையும் ஜ்யாயஸ்ஸாக இருக்கும் தன்மையும் இல்லை என்பது வ்யக்தம். இப்படி மற்றை எல்லா வஸ்துவுக்கும் அணீயஸ்த்வமும் ஜ்யாயஸ்த்வமும் நிஷேதிக்கப்படுகிறபடியால், எவ்விதம் இவனைக்காட்டிலும் மற்றொன்றுக்கு பரத்வம் சொல்வது யுக்தமாகும்?

'அப்படியானால் ப்ரக்ருத வாக்யத்தின் அர்த்தம் என்ன?' என்று கேட்கக் கூடும். வாக்யத்தின் அர்த்தமாவது—இந்த ப்ரகரணத்தின் ஆரம்பத்தில், "**தமேவ விதித்வாதிம்ருத்யுமேதி**" இத்யாதியால் 'அந்தப் புருஷனை வேதநம் செய்வதே அம்ருதத்வத்திற்கு ஹேது; மற்ற எதுவும் அந்த அம்ருதத்வத்திற்கு வழியாகமாட்டாது' என்று ப்ரதிஜ்ஞை செய்துவிட்டு, பிறகு "**யஸ்மாத் பரம்**" இத்யாதியான வாக்யத்தால் 'அந்தப் புருஷனே எல்லாவற்றைக் காட்டிலும் பரதரமான வஸ்து' என்று ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது. அதற்குப் பிறகு "**ததோ யதுத்தரதரம்**" என்னும் ப்ரக்ருத வாக்யம். '**தத:**'=இப்படி புருஷதத்வமே பரதரமென்று கீழ்ப் ப்ரதி

ஒன்றும் பரமான வஸ்து அன்றோ] என்று புருஷதத்வத்தைக் காட்டிலும் பரதரமான தத்வமொன்றுமில்லை என்று நிஷேதித்துவிட்டு, அடுத்த வாக்யத்தில் '**ததோ யதுத்தரதரம்**' [அந்தப் புருஷதத்வத்தைக் காட்டிலும் யாதொரு பரதரமான வஸ்து உண்டோ] என்று சொல்வது முன்னுக்குப் பின் விருத்தமன்றோ? இந்த விஷயத்தை ஈட்டில் பின்வருமாறு விவரித்திருப்பது அதிமாத்ரம் ரஞ்ஜகம். "**யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்** என்று ஓதிவைத்து, 'அதுக்கு மேலே ஒன்று உண்டு காண்' என்னும் போது, அஜ்ஞனாய்ச் சொல்லுமத்தனை; முதலிலே ஓதாதவன் வார்த்தை யாமத்தனை." [ஈடு 4-ம் பத்து, 10-ம் திருவாய்மொழி.]

**கதம் தர்ஹி அஸ்ய வாக்யஸ்யார்த:**:—வாக்யத்தின் உண்மையான அர்த்தம் என்னவென்றால்—**தத:**=கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ஹேதுவினால், **உத்தரதரம்**=ஸர்வோத்க்ருஷ்டமான, **யத்**=பூர்வோக்தமான யாதொரு புருஷதத்வமுண்டோ, **தத்**=அந்த ஸர்வஸ்மாத் பரமான புருஷதத்வம், **அரூபம்**=கர்மக்ருதமான ப்ராக்ருத ரூப



**ஸ்யாபதாம் ச ப்ரதிஜ்ஞாய, "யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்" இத்யநேந வாக்யேந பரமபுருஷஸ்ய ஸர்வஸ்மாத் பரத்வம் ப்ரதிபாத்ய । யத: பரமபுருஷ ஏவோத்தரதரம், ததோ, 'யதுத்தரதரம் பரமபுருஷதத்வம் ததரூபமநாமயம்; ய ஏதத்விதுரம்ருதாஸ்தே பவந்தி, அதேதரே து:கமேவாபி-**

பாதிக்கப் பட்டிருக்கிறபடியால், '**யதுத்தரதரம்**'=அப்படி உத்தரதரமென்று ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள யாதொரு புருஷதத்வமுண்டோ, '**ததரூபம்**'=அதுவே ரூபமற்றது, '**ததநாமயம்**'=அதுவே ஆமயமற்றது; '**ய ஏதத்வி:...**'=இதை எவர்கள் அறிகிறார்களோ அவர்களே அம்ருதத்வத்தை அடைகிறார்கள்; '**அநா**

மற்றது; **அநாமயம்**=கர்மத்தால் ஏற்படும் ஸுக து:க்காதிகளற்றது. **ய ஏதத்விதுரம்ருதாஸ்தே பவந்தி**-எவர் இந்தப் புருஷ தத்வத்தை உத்தரதரமென்று அறிகிறார்களோ, அவர்களே அம்ருதத்வத்தை அடைகிறார்கள். **அதேதரே து:கமேவாபியந்தி** அப்படி யறியாதவர்கள் ஸம்ஸாரத்தையே அடைகிறார்கள். '**[illegible]**" இத்யாதி வாக்யமும், "**ஸஹஸ்ரசீர்ஷா புருஷ:**" இத்யாதி வாக்யத்துடன் ஒரே அர்த்தத்தை உடையதாதலால், பரமபுருஷனாகிற நாராயண விஷயமே. இந்த வாக்யத்திற்கு இப்படி அர்த்தம் சொல்வதற்கும் **ஆபாதத:** தோன்றும் அர்த்தத்திற்கும் பேதம், வாக்யத்தின் முதலில் உள்ள '**தத:**' என்னும் சப்தத்தின் அர்த்தத்தைச் சார்ந்து நிற்கின்றது. '**தத:**' என்பது பூர்வோக்த புருஷதத்வத்தைப் பராமர்சிக்கின்றது என்பதும், '**உத்தரதரம்**' என்பது ருத்ரபரமென்பதும் பூர்வபக்ஷம்; '**தத:**' என்பது ஹேது பரமென்பதும் '**உத்தரதரம்**' என்பது ஸர்வஸ்மாத் பரனான புருஷ பரமென்பதும் ஸித்தாந்தம்.

**அந்யதா உபக்ரமக்ருதப்ரதிஜ்ஞாநாம் விரோதஸ்ஸ்யாத்**—இப்படி ஸித்தாந்தம் செய்வதற்கு ஹேதுவென்? என்றால், 'இவ்விதம் அர்த்தம் கொள்ளாவிட்டால் உபக்ரமத்தில் செய்யப்பட்டுள்ள ப்ரதிஜ்ஞைகளுக்கு விரோதம் ஏற்படும்' என்கிறார்.

இந்த ப்ரகரணம் எப்படி இருக்கின்றது என்றால்—முதலில்,

"**தமேவ விதித்வாதி ம்ருத்யுமேதி, நாந்ய: பந்தா அயநாய வித்யதே**"

பிறகு "**யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்...தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம்**",

முடிவில் "**ததோ யதுத்தரதரம்....**"

இது வாக்யங்களின் க்ரமம். இவைகளுள் முதல் வாக்யத்தில் புருஷதத்வத்தை 'வேதநம் செய்வது அம்ருதத்வத்திற்கு ஹேது' என்றும், 'அதைத் தவிர்த்து மற்றை எதுவும் அம்ருதத்வத்திற்கு வழி ஆமமாட்டாது' என்றும் இரண்டு ப்ரதிஜ்ஞைகள் செய்யப்படுகின்றன. நடுவில் வரும் வாக்யத்தில், 'அந்தப் புருஷதத்வமே ஸர்வஸ்மாத் பரம்' என்று சொல்லப்படுகின்றது. முடிவில் காணப்படும் வாக்யத்தில் '**ததோ யதுத்தரதரம்** என்பது **அரூபம் அநாமயம்**' இதை இவ்விதம்

[illegible]

---

[illegible]......' என்று எல்லாரும் துக்கத்தையே அடைகிறார்கள். இது [illegible] வாக்யத்தின் அர்த்தம். இவ்விதம் அர்த்தம் சொன்னால் மாத்திரம், மேல் ப்ரதிஜ்[illegible]மாயுள்ள

---

அறிகிறவர்களே அம்ருதத்வத்தை அடைகிறார்கள், மற்றவர்கள் அம்ருதத்வத்தை அடையார்' என்று சொல்லப்படுகின்றது. இதைப் பார்த்தால் உபக்ரமத்தில் சொல்லப்பட்டுள்ள ஹேதுவே முடிவில் ஹேது ப்ரஸ்லமாக உபஸம்ஹரிக்கப்படுகின்றது என்பது வ்யக்தமாகவில்லையா? முதலில் சொல்லப்பட்டுள்ள அம்ருத[illegible] ஹேது, புருஷதத்வ வேதநம்; ஆகையால் முடிவில் சொல்லப்படும் அம்ருதத்வ ஹேதுவும் அந்தப் புருஷதத்வ வேதநமாகவே இருத்தல் வேண்டும். ஆகையால் "[illegible] என்பதற்கு வித்வாந்கள் சொல்லும் மாதிரி அர்த்தம் சொல்லுதல் [illegible]கதமாகும். முதலில் புருஷதத்வ வேதநத்தை அம்ருதத்வ ஹேதுவென்று சொல்லிவிட்டு, முடிவில் 'அந்தப் புருஷதத்வத்தைக் காட்டிலும் பரமான வஸ்து ஒன்று உண்டு; அதை அறிவதுதான் அம்ருதத்வ ஹேது' என்று சொல்வது பூர்வாபர விருத்தமே ஆகும். இதுதான் இவ்விடத்தில் செய்யப்படும் உபபாதநம்.

"[illegible]" என்னும் ச்ருதி வாக்யத்திற்கு ஸ்ரீ பாஷ்யகாரர் செய்துள்ள அந்வயம் கவனிக்கத்தக்கது. "[illegible]" என்பது அவர் செய்துள்ள அந்வயம். உள்ளபடி "[illegible]" என்று அந்வயம் செய்யும் பக்ஷத்தில் 'எதைக்காட்டிலும் உத்க்ருஷ்டதரமாக வேறு ஒரு வஸ்துவும் இல்லையோ' என்று மாத்ரம் அர்த்தம் கிடைக்கும். அப்படி அர்த்தம் கொண்டால், 'உத்க்ருஷ்டதரமானது ஒன்றுமில்லை' என்று அப்யதிக நிஷேதம் மாத்ரம் செய்ததாகும்; 'அவனுக்கு ஸமமானது ஒன்றுமில்லை' என்று ஸம நிஷேதம் செய்யப்பட்டதாக மாட்டாது. ஸ்ரீ பாஷ்யகாரர் செய்துள்ள அந்வயத்திலோ வென்றால், அவனைக்காட்டிலும் உயர்ந்த வஸ்துவுமில்லை, அவனுக்கு ஸமமும் இல்லை, என்று ஸம அப்யதிக உபய நிஷேதம் செய்யப்பட்டதாகின்[illegible] [illegible]ன்றால், உபய நிஷேதத்தைக் காண்பிக்கும் அர்த்தம் சொன்னதே ஸ்வரஸம்.

'[illegible]' -இதற்கு 'ஸூக்ஷ்மமாக இருக்கும் தன்மை' என்பது பொருள். அதாவது, 'எல்லாவற்றினுள்ளிலும் வ்யாபிக்கும் தன்மை' என்று சொன்னதாயிற்று. ஸகல அசேதந தத்வத்தையும் வ்யாபித்து நிற்கின்றது ஜீவாத்மா; அந்த ஜீவாத்மாவையும் இந்தப் புருஷதத்வம் வ்யாபித்து நிற்கிறபடியால், இது ஸூக்ஷ்மமே. '[illegible]' இதற்கு 'ஸர்வத்துக்கும் ஈச்வரனாக இருக்கும் தன்மை' என்பது பொருள். [illegible] [illegible] இரண்டு சப்தங்களும் நபும்ஸக லிங்க சப்தங்கள்; [illegible] என்பது [illegible] இப்படி ப்ரயோகம் செய்வது வேதத்தில் உண்டு.